
www.tamilarangam.net

Raya

# மனிதம்

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR - SEINE, FRANCE



வேறுபட்ட முகாம்களின் துப்பாக்கி மோதலின்
எழும் தீச்சுவாலையில்
அவதியுறும் எம் மக்கள்!

ஜன,பெப். 90

3

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# - எப்படிப் பொங்குவோம் -

எப்படிப் பொங்குவோம்!
எம்மவர் சடலங்கள்
எல்லைகளில் நகணங்கள்
அண்மையில் நடந்தவை
அத்தனையும் மறந்து
எப்படிப் பொங்குவோம்!

தூறல் நின்றாலும்
துயரங்கள் ஓயவில்லை.

அந்நிய கரங்களில்
அகப்பட்ட
எம் மக்கள் அழுகுரல்கள் ஓயவில்லை
அத்தனையும் மறந்து
எப்படிப் பொங்குவோம்!

- யதார்த்தினி -



www.tamilarangam.net

# மனிதம்!



உலகெங்கும்

வாழ்வை இழந்து வசதி பொறுக்குகின்ற
மனிதச் சருகுகளாய்ப் புரள்கின்றோம்.
என்ன நம் தாய் நாடு
ஓயாமல் இலை உதிர்க்கும்
உயிர்ப்பிழந்த முது மரமா ?

## உணர்வோம்!
## உணர்த்துவோம்!

அன்பான நண்பனே!

வரலாறு 1990 களை எம்மை நகர்த்தியிருக்கிறது. கொடிய அனுபவங்களுடன் கூடிய இன்னல்களை விளைவித்து புதிய பல பொறுப்புக்களைச் சுமத்திச் சென்றிருக்கிறது 1980 கள். இப் பொறுப்புணர்வுடன் மனிதம் புத்தாண்டுக்குள் நுழைகிறது. இந் நிலையில் எம்மில் எத்தனைபேர் சமூகப் பொறுப்பை உணர்ந்திருக்கின்றோம் என்ற அர்த்தமான கேள்வி எம்முன் எழுகிறது.

அவலங்களைச் சுமந்த மக்கள் நாளுக்கு நாள் மரணங்களைத் தழுவுகிறார்கள். நிர்ப்பந்தம் பன்னிரண்டு வயதுச் சிறுவன் முதல் இளைஞர்வரை பலரை நாட்டைவிட்டு வெளியேற்றுகிறது. இது எங்கள் மண்ணின் நிலை.......

இங்கு-----.

அதிகரித்துவரும் நிறவெறி நாசிகளின் தொல்லைகளின் நடுவே ஏதிலிர அந்தஸ்தும் அற்ற இரண்டாம் தரப் பிரஜைகள் நாம்.

www.tamilarangam.net



நாம் விரும்பியோ விரும்பாமலோ அந்நிய நாடுகளில் எமக்கோ, எங்கள் சிறார்களுக்கோ சுதந்திரம் கொண்ட எதிர்காலம் இருக்கவே முடியாது! எமது மண்ணில் எம் நிகழ்.காலம் தற்காலிகமாகச் சீர்குலைந்து இருந்தாலும் எங்கள் எதிர்காலம் எங்கள் மண்ணில்தான்!. எங்கள் சிறார்கள் ஆயினும் அங்குதான் சுதந்திரக் காற்றை பூரணமாய்ச் சுவாசிக்க முடியும். அதற்கான போராட்டம் தொடரவே செய்யும். இது தவிர்க்க முடியாத வரலாற்று நியதி. இப் பணியை நிறைவுசெய்ய------

எமக்கு இன்று அவசியமானது, மனித நேயம் மிக்க சமூகப் பொறுப்புணர்வு.

இயக்கங்களின் எண்ணத்தைச் சிந்தனை என்று கேள்வியை எழுப்பி எங்கள் சமூகப் பொறுப்பிலிருந்து தப்பிக்க முயல்கிறோம். எம்மில் சிலர், நண்பனே! ஏற்கனவே எமது சுதந்திரத்தை விடுதலை இயக்கங்களோ பெற்றுத்தரும் என்று நாம் சமூகப் பொறுப்பை உணராமல் இருந்துவிட்டோம் அல்லது அலட்சியப்படுத்தி விட்டோம்.

இதன் விளைவு-------

இன்று அடிப்படை ஜனநாயக உரிமைகளைக் கூட இழந்துபோய் நிற்கிறோம். சிந்தனையிலோ பேரளவிலோ முழுச் சமூகத்தினதும் பங்கு பற்றலிலேயே விடுதலைப் போராட்டம் வெற்றிபெற முடியும். இதை நாம் இனியாவது உணர்வோம்!

« இங்கிருந்துகொண்டு எழுதுகின்ற நீங்கள் நாட்டிலிருந்து கொண்டு செயற்படலாமே? » என்று

www.tamilarangam.net



கேள்வியும் எம்மைத் தொடர்கிறது - கேள்வி நியாயமானதுதான். ஜனநாயகத்தின் தொண்டைக் குழிகள் நெரிக்கப் படுகின்ற சூழ்நிலையிலும் தலைமறைவு வாழ்விலூடே அல்லது ஏதோ ஒரு வகையில் தம் பணியைத் தொடருகின்ற ஜனநாயக சக்திகள் பன்மடங்கு மேன்மையானவர்கள்தான். அதேவேளை இருக்கிறோமே என்பதற்காக எம்மால் செய்யக்கூடியதைக்கூட செய்யாமல் விடுவது அபத்தமானது. ஏனெனில் இவ்வகை செயற்பாடுகள் ஜனநாயக சக்திகளை பலப்படுத்தவும் உத்வேகமூட்டக் கூடியதும் ஆகும். இச் சமூகப் பொறுப்பை நாம் உணர்வோம்.

சமூகப் பொறுப்புள்ள மனிதரை கவலை கொள்ள வைப்பது என்னவென்றால் - வெளிநாடுகளில் இன்றும் எம் இளைஞர்கள் பலர் சமூகப் பொறுப்பற்று நாட்டுப் பிரச்சினை பற்றிய அக்கறை இன்றி குடிபோதையிலும், ஆபாச உணர்வுகளைத் தூண்டும் குப்பை வெளியீடுகளை வாசிப்பதிலும், அதன்வழியே மனதை அலையவிட்டுச் சீரழிவதிலும் பொழுதைப் போக்கி இளமையின் சக்தியைக் குறுக்கி அழித்துவிடுகிறார்கள்.

நண்பா! எமது எதிர்கால வாழ்வை நானோ நீயோ அல்லது எமது பணமோ மட்டும் தீர்மானிக்க முடியாது. குடும்பம் என்பது சமுதாயத்தின் ஓர் அங்கம். சமுதாயம் என்ற முழு உடலின் ஒழுங்கான இயக்கமின்றி, திடகாத்திரமின்றி, வளர்ச்சியின்றி «எனது குடும்பம்» என்ற சிறு பகுதிமட்டும் சௌகரியம் அடைந்துவிட முடியாது. ஆகவே எமது சமுதாயத்தை ஆரோக்

www.tamilarangam.net



தியமாக தாக்கி நிறுத்தும் பணியை உணர்வோம்.

இக் கடமையை நிறைவு செய்வதற்கு நாம் வாசிப்போம், எழுதுவோம், கலந்து உரையாடுவோம், விவாதிப்போம் - அரசியலைக் கற்றுக் கொள்வோம். பொருளியல், உளவியல், அளவையியல் (தர்க்கவியல்), தத்துவ இயல் போன்ற சமூக விஞ்ஞானங்களில் அரசியலும் ஒன்றுதான்.

தேர்தல் கட்சிகள் பதவிகளை தக்கவைப் பதற்காக வியாபாரமாக்கி அரசியல் எனும் சமூக விஞ்ஞானத்தைக் கொச்சைப்படுத்திவிட்டன. அதனாலேயே அரசியலில் உள்ள சமூகப் பொறுப்பை எம்மில் பலரால் விளங்கிக் கொள்ள முடியாமல் இருக்கிறது. இதுபோல் எமது இயக்கங்களின் அரசியல் வழிகாட்டுதலில் காணப்படும் இராணுவவாதப் போக்கும், சமூகப் பொறுப்பற்ற தன்மையும் கூட « அரசியல் » பற்றி குழப்பமான விளக்கத்தையே மக்களுக்குக் கொடுக்கின்றன. நமது வாழ்வில் நாளாந்தம் எழுகின்ற பிரச்சினைகள், சமுதாயப் பிரச்சினைகள் அனைத்திற்கும் அடிப்படையே அரசியல்தான்.

எனவே நண்பா எமது சமுதாயப் பொறுப்பை உணர்ந்து மனிதம் இதழினூடாகச் சந்திப்போம் - விமர்சிப்போம். இதே வழியில் அணிவகுக்கும் ஏனைய சஞ்சிகைகளுடனும் கரங்களை இணைப்போம்.

எமது பொறுப்புக்களை

உணர்வோம்!

உணர்த்துவோம்!

www.tamilarangam.net



# படைவிலகலும் எழுந்துள்ள நிலைமையும்

இலங்கை இந்திய அரசுகளுக்கு இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை மூலம் சென்ற ஒக்டோபர் 89 இல் படைவிலகல் சம்பந்தமான ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டமை தெரிந்ததே. அதன் அடிப்படையில் டிச. 31 இக்குள் முழு அளவில் படை விலகலை மேற்கொள்வதாக முன்னைய இந்தியப் பிரதமர் அறிவித்திருந்தார். இதனைத் தொடர்ந்து முதற் கட்டப் படைவிலகல் அம்பாறை மாவட்டத்தில் கடந்த நவம்பரில் ஆரம்பமானது. அம்பாறையை விட்டு இந்திய ராணுவம் வெளியேறியதும் அங்கு தமிழ், முஸ்லிம் மக்களைப் பாதுகாக்கப் போவதாகக் கூறி T.N.A முகாம்களில் நிலைகொண்டது. பலவந்தமாக சேர்க்கப்பட்ட அப்பாவி இளைஞர்களே முகாம்களில் குவிக்கப்பட்டனர். இவர்களுக்கு ஏற்கனவே 'தொண்டர் படை' என்ற பெயரில் இந்திய ராணுவம் பயிற்சி அளித்தமை தெரிந்ததே. இச் சந்தர்ப்பத்தில் சட்டவிரோத ராணுவம் இயங்குவதாக எதிர்க் கட்சிகளும் பத்திரிகைகளும் பிரச்சாரப்படுத்தின. இதனால் பாதுகாப்பு அமைச்சுக்கும் வட-கிழ. முதலமைச்சருக்கும் இடையில் தர்க்கவாதங்கள் அடங்கிய கடிதங்கள் பரிமாறப்பட்டு இறுதியில் தமிழ்த் தேசிய ராணுவம் (TNA) என்ற ஒன்று இல்லை என முற்றாக வரதராஜ பெருமாள் மறுத்துவிட்டார்.

அம்பாறை மாவட்டத்தில் EPRLF, TELO ஆகியவை முகாமிட்டிருந்த தம்பாவில் திருக்கோவில் முகாம்கள்மீது 5.11.89 இல் புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்

www.tamilarangam.net



பட்டது. இத் தாக்குதலில் 40 க்குமேற்பட்ட TNA யினர் மரணமடைந்தனர் என்றும் 140 க்கு மேற்பட்டோர் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டதாகவும் புலிகள் தரப்பில் 16 பேர் மாண்டனர் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இயக்கங்களுக்கு இடையிலான மோதலை எதிர்பார்த்த இலங்கை அரசானது தானும் மக்களைக் காப்பாற்ற எனக் கூறிக்கொண்டு இராணுவத்தையும் அதிரடிப்படைப் பிரிவையும் அம்பாறைக்கு அனுப்பிவைத்தது. புலிகள் அம்பாறையில் EPRLF இன் முகாம்களைத் தாக்கியதன் மூலம் 'தமிழ் தேசிய ராணுவம்' என்ற ஒன்று அம்பலமாகியுள்ளது. அதேசமயம் LTTE யினர் ஆயுதம் ஏந்துவதை அரசாங்கம் அனுமதிக்கின்றது. இலங்கை அரச படைகளின் துணையுடனேயே தாக்குதல் நடைபெற்றதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அதற்கான சாத்தியக்கூறுகள் நிறைய உண்டு.

இத் தாக்குதலை முறியடிக்கும் வகையில் அம்பாறை மாவட்டத்தில் 17.11.89 இல் நான்கு பொலிஸ் நிலையங்களின் மீது (கல்முனை, அக்கரைப்பற்று, சம்மாந்துறை, சவளக்கடை) திடீர்த் தாக்குதலை தமிழ் தேசிய ராணுவம் மேற்கொண்டது. காரைதீவு பொலிஸ் நிலைய தாக்குதலின் போது 81 றிசேவ் பொலிசார் கடத்திச் செல்லப்பட்டனர். இவர்களின் 41 பேரின் சடலம் காரைதீவு சந்தியில் வீசப்பட்டிருந்தது. நிலைமை மோசமடைவதை அவதானித்த மக்கள் ஆயிரக்கணக்கில் அகதிகளாக மட்டக்களப்பை நோக்கி இடம்பெயர்ந்தனர்.

7.11.89 இல் ராணுவமும் பொலிசும் அம்

www.tamilarangam.net



பாறைக்கு வரத் திட்டமிட்டிருந்தன என்ற செய்தியை அறிந்ததும் அவ்வாறான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டாமென நான் பலதடவை இலங்கை அரசைக் கேட்டதாக வரதராஜப் பெருமாள் கூறுகிறார். "அதையும் மீறி இராணுவத்தையும் அதிரடிப்படையையும் நிரப்பியது-டன் தொண்டர் படையையும் நிராயுதபாணியாக்கி மா-நிலத்தில் தமிழ்-முஸ்லிம் கலவரத்தை உண்டாக்கும் நடவடிக்கையிலேயே இலங்கை அரசு ஈடுபட்டது. இதன் விளைவே அம்பாறைச் சம்பவமாகும். எனவே இலங்கை அரசு பொறுப்புணர்வுடனும் நிதானமாகவும் நடந்திருந்தால் அம்பாறை சம்பவங்களைத் தடுத்திருக்கலாம்" என வரதராஜப் பெருமாள் கூறினார். இந்திய இராணுவ வருகையின் பின்னும் இவ்வாறான சம்பவங்கள் நடந்ததும், தமிழ்-முஸ்லிம் மக்கள் பாதிக்கப்பட்டதையும் வரதராஜப் பெருமாள் மறைத்துவிட முடியும் ?

அம்பாறையை அடுத்த மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து இந்திய இராணுவம் வெளியேறிவிட்டது. இம் மாவட்டங்களில் மக்கள் பீதியுடனேயே வாழ்கிறார்கள். வெளியேறும் பகுதிகளில் இயக்கங்களின் அராஜக நடவடிக்கைகள் நடந்தவண்ணமே உள்ளது. இதனால் மீண்டும் குறிப்பிடத்தக்களவு தமிழ் மக்கள் அகதிகளாக தென்னிந்தியா சென்றிருக்கின்றனர்.

கடைசியாகக் கிடைத்த இந்தியச் செய்திகளின்படி 'அமைதிப்படை' திருமலை, யாழ். மாவட்டங்களிலிருந்து 1990 மார்ச் 31 க்கு முன்னர் வெளியேற உள்ளதாக அறிவித்துள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்தியா தென் ஆசியாவின் பிராந்திய மேலாதிக்கம் கொண்ட 'வளர்ச்சிப்' போக்கில் போய்க்கொண்டிருக்கிறது. இதற்கேற்பவே மாறியுள்ள புதிய அரசும் தனது கொள்கைகளை வகுக்கும். மார்ச் மாதம் படைகள் வெளியேற்றப்பட்டாலும் பிராந்திய மேலாதிக்கப் பிடியிலிருந்து இலங்கை நெகிழா வண்ணம் அதனுடைய வெளிநாட்டு கொள்கையும் நடவடிக்கைகளும் அமையும் என எதிர்பார்க்கலாம். இத்துடன் இந்திரா காந்தியின் காலத்தில் கட்டியமைக்கப்பட்ட உளவு ஸ்தாபனமான "றோ" (RAW) ஆனது ஜனதா ஆட்சிக் காலத்தில் கலைக்கப்பட்டது போல் வி.பி. சிங்கின் ஆட்சியிலும் கலைக்கப்படுமானால் புதிய அரசு இனிவரும் காலங்களில் இயக்கங்களை எவ்வாறு கையாளப்போகிறது என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

பிரேமதாச படைவிலகல் விடயத்திலும், இயக்கங்களை - குறிப்பாக புலிகளை தனது கைக்குள் போடுவதிலும், JVP தலைவர்களை அழிப்பதிலும் தற்காலிக வெற்றி கண்டுள்ளார். இவர் தனது அதிகாரத்தை தக்க வைப்பதற்காக புதிய கோசங்களோடு சர்வகட்சி மாநாடு, பேச்சுவார்த்தை என்பவற்றை நடாத்தி தனது ஆட்சிக்காலத்தை நீட்டுகிறார். அதுமட்டுமன்றி புதிய பாணியில் - இயக்கங்களை திருப்திப் படுத்துவதற்காக "மாகாணசபைகளுக்கு அதிகாரம் வழங்காவிட்டால் நாடு பிரிவதை தடுக்கமுடியாது" என குமிழி உடைக்கிறார். மறுபுறத்தில் தன் உள்ளார்ந்த நோக்கங்களை இயக்கங்களை மோத விடுவதன் மூலமும், இயக்கங்களின்

www.tamilarangam.net



அராஜக நடவடிக்கை மூலம் நிறைவேற்றி வருகின்றார்.

இந்நிலையில் 'விடுதலை' இயக்கங்கள் EPRLF, TELO ENDLF - LTTE யும் தாங்கள் இலங்கை இந்திய அரசுகளுக்கு பகடைக்காய்களாய் இருப்பதையும் தங்களின் மோதல்களால் மக்கள் அநியாயமாகப் பலியாகின்றனர் என்ற உண்மையையும் உணர்ந்து செயல்பட்டதாகத் தெரியவில்லை.

இந்திய சார்பு இயக்கங்கள் நம்மைப் பாதுகாக்க தமிழகம் முதல் டில்லிவரை பறக்கின்றனர். கடந்த காலங்களில் இந்திய அரசும் - இந்திரா, ராஜீவ் இவரும் தங்கி நின்றவர்கள் தற்போது வி.பி.சிங்கை நோக்கி ஓடுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. இவர்கள் இப்படி ஓடிக்கொண்டிருக்க மறுபுறத்தில் புலிகள் மாகாண சபையை ஏற்றுக் கொள்வதாக அறிவித்துள்ளனர். இத்தனைக்கும் மத்தியில் விடுதலைப் பயணத்தில் இவர்களோடு செல்லவேண்டிய தமிழ் மக்கள் இவர்களை விட்டே விலகி ஓடுகிறார்கள்.

- நந்தகுமார் -

குறிப்பு :- இக் கட்டுரையில் - முஸ்லிம் மக்களும் தமிழ் பேசும் மக்கள் என்பதை தெளிவுபடுத்தக்கூடிய பதம் கிடைக்காததால் தமிழ் - முஸ்லிம் ஸவரம் எனப் பாவிக்கப்பட்டுள்ளது.

ஆ-ரீ ஞெ

www.tamilarangam.net



# சூரிச் இல் பொங்கல் விழா

14.01.90 அன்று சுவிஸ் நாட்டில் உள்ள சூரிச் மாவட்டத்தில் பொங்கல் விழா கோலாகலமாக நடைபெற்றது.

வழியில் தென்னோலையால் செய்யப்பட்ட தோரணங்கள், வாசலில் இரண்டு குலையுடன் கூடிய வாழைகள், வாழைகளின் உயர்ந்திருந்த இருபுறங்களும், நடுவே செவ்விளநீர் குலையுமாக, அலங்கரிக்கப்பட்டிருந்தது. கு-லையனைத்தும் பொங்குவதற்கு தேவையான பானை பாத்திரமும் இலங்கையில் இருந்து AIR LANKA விமானத்தில் கொண்டு வரப்பட்டது. விழாவுக்கும் தனியாக ஐயர் நால்வர் முழு வேட்டி அணிந்து, ஓதலும் மேளமொடும், பொங்கல் செய்தோரில் ஆண்கள் வேட்டி சேட்டுடனும் பெண்கள் சேலையுடனும் கலந்து கொண்டனர்.

மேடை மீது மணவறை போன்ற அமைப்பில் நின்று நின்று எரியும் மின்சார வி-ளக்குகள் பொருத்தப்பட்டிருந்தன. இங்கு பிள்ளையார், முருகன், இலட்சுமி, படங்கள் வைக்கப்பட்டிருந்தன. முன்னாள் கிருபானந்தவாரியாரின் கதாப்பிரசங்கமும், சீர்காழி சிதம்பரம் அவர்களின் பக்தி இசையும் சிறப்பு நிகழ்ச்சியாக இடம் பெற்றன. தமது 'கலாச்சார' நிகழ்ச்சி என நம்பி மக்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சி பலருக்கு அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும் கொடுத்தது. இவ்விழாவிலும் மூன்று அதி நவீன வீடியோ கமராக்கள் அணிவகுத்தன. இவ் விழா பெரிய பணச்செலவுகளால் கொண்டாடப்படும் விழா போலவே காட்சியளித்தது. வேடிக்கை என்னவென்றால் தோரணம் செய்வதற்கு தேவையான தென்னங் குருத்துகளும், குலையுடன்

www.tamilarangam.net



கூடிய வாழைமரங்களும் செவ்விளநீர் குலைகளும் கரும்புக
ளும் AIR LANKA விமானம் ஒன்றில் வந்து இறங்கியது
தான். மிகையான ஆடம்பரத்தாலும், இலங்கையில் இருந்து யா
னைகளை தருவித்தும் தான் எமது கலாச்சாரத்தை காப்பாற்ற
வேண்டுமோ?

இவ்வாறான பயனற்ற விடயங்களில் சுமார் 35 000
பிராங்குகள் ஒரு நாளில் விரயமாக்கப்பட்டது இதே வேளை
எமது நாட்டில் வைத்தியசாலை நிர்வாகம் நோயாளிகளுக்
கான கட்டில் வசதி, பராமரிப்பு, மருந்துவகைகள் போன்ற அ
த்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்வதற்கான நிதியை கோ
ரும் செய்திகளை வீரகேசரி போன்ற பத்திரிகைகளில் நா
ம் பார்க்கிறோம் இதே போல் கல்வியும் எத்தனையோ அத்தியா
வசிய தேவைகளை எமது நாடு வேண்டி நிற்கிறது.

ஆனால் நாம்........

- கிளை யோகம்-

---

# படியுங்கள்!

**தாயகம்**

ந. இரவீந்திரன்
15/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்,
இலங்கை.

**புதிய கலாச்சாரம்**

அ.முகுந்தன்,
55, நேரு நகர்,
வில்லிவாக்கம்,
சென்னை - 600 0049.

**மனஓசை**

த. பெ. எண் : 2484,
24, சாரங்கபாணி தெரு,
மேத்தா நகர்,
சென்னை-600 029.

**தூண்டில்**

"Thoondil"
Süd Asien Büro
Große Heimstr.58
4600 Dortmund 1

'புதிய ஜனநாயகம்'
ஆசிரியர்,
எஸ். மதியழகன்
21, பாலஜெகிசிங் தெரு
சைதாப் பேட்டை
சென்னை-600 015.

**கேடயம்**

த. பெ. எண். 2480,
21-ரயில்வே காலனி,
இரண்டாவது தெரு,
மேத்தா நகர்,
சென்னை-29.

**"சுவடுகள்"**

Tamilsk-Norsk Kafe
Herslebs Gate 43
0578 Oslo
Norwegen

**"அஆஇ"**

"AANAA AAWANNAA IENAA"
Postbus 8523
8905 KM Leeuwarden
Holland

.o.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ருமேனியா




கடந்த ஆண்டு சோசலிச நாடுகள் என அழைக்கப்படும் நாடுகளில் பல வகையான போராட்டங்களும் மாற்றங்களும் நடைபெற்றன. இவ் வகையில் கடந்த டிசம்பர் மாதம் ருமேனியாவின் திமோசாரா நகரில் மதகுரு ஒருவர் வெளியேற்றப்பட்டதை அடுத்து இப் பகுதியில் ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பமாயின. இவ் ஆர்ப்பாட்டம் ஏற்கனவே அரசின்மேல் இருந்த அதிருப்தி காரணமாக தேசிய அளவில் அரசுக்கு எதிரான போராட்டங்களாக உருவெடுத்தது. இப் போராட்டத்தினை ஆயுதம் கொண்டு சியாஸ்கோ அரசு அடக்கியது. இதேபோன்று ருமேனியாவின் மேற்குப் பகுதியில் உள்ள ஹங்கேரி பூர்வீக இனத்தைச் சேர்ந்த மக்கள் ஜனநாயக உரிமைகோரிப் போராடியபோது பல ஆயிரக்கணக்கானோரைக் கொன்று குவித்தனர். இதேபோல் வேறொரு சம்பவத்தில் மாதா கோயில் முன்பு 36 குழந்தைகளையும்கூட படுகொலைசெய்தனர். இச் சாட்சியை எதிர்த்து ஜனநாயகத்தைக் கோரி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் குதித்தனர்.

www.tamilarangam.net



சியாஸ்கோ தனக்கு மக்களிடம் ஆதரவு இருப்பதை நிரூபிப்பதற்காக கடந்த டிச. 21ம் திகதி புக்காரெஸ்டில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றிற்கு சமூகம் கொடுத்திருந்தபோது மக்கள் இவனுக்கெதிராக கோசங்களை பலமாக எழுப்பியதால் பேச முடியாமல் போனது. இதனைத் தொடர்ந்து சியாஸ்கோவின் பாரா துருப்புக்கள் கவச வாகனங்கள் சகிதம் மக்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பலர் கொல்லப்பட்டனர். ஆனால் இராணுவம் மக்களுடன் இணைந்து அரச ஆதரவு படைகளுக்கு எதிராகப் போராடியது. இச் சண்டையில் பல அப்பாவி மக்கள் கொல்லப்பட்டு தெருக்களில் வீசப்பட்டிருந்தனர்.

உடனுக்குடன் மேற்குலக தொலைக்காட்சி நிறுவனங்கள் வழமையான நிகழ்ச்சிகளை நிறுத்திவிட்டு ருமேனியா பற்றிய செய்திகளை ஒளிபரப்பியது. இதன்போது 10,000 க்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டதாகவும், பின்பு 4,000 க்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டதாகவும் மேற்குலக செய்தி ஸ்தாபனங்கள் முன்னுக்குப் பின் முரணான செய்திகளை வெளியிட்டனர். இதனால் சரியான எண்ணிக்கை பற்றி அறியமுடியாமல் உள்ளது. சோசலிச நாடுகள் எனப்படும் இந் நாடுகளின் இத்தகைய நிகழ்வுகள் சோசலிசம் கம்யூனிசம் என்றால் சர்வாதிகாரம் என மேற்குலக நாடுகள் செய்யும் விசமப்பிரச்

www.tamilarangam.net



சாரங்களை நிரூபிப்பதாக அமைகின்றன. இதற்கு ஆதாரமாக சமகால சம்பவமான பனாமாவில் அமெரிக்காவின் படுகொலைகளை ஜனநாயகத்தைக் காப்பதற்கானதென நியாயப்படுத்திக் கொண்டு ருமேனியா போன்ற நாடுகளைப் பற்றிய பிரச்சாரத்தை மிகைப்படுத்தியமையையும் அவதானிக்கலாம்.

இவ் ஆர்ப்பாட்டத்தின் பின். சியாஸ்கோவும் அவனது மனைவி எலெனாவும் தேசிய இரட்சணிய முன்னணியின் இராணுவ விசாரணையின்பின் சுட்டுக்கொல்லப்பட்டனர். இவ் இராணுவ விசாரணையை அனைத்து மேற்குலக தொலைக்காட்சிகளும் ஒளிபரப்பின. இவ் விசாரணையின் போது தன்னை மக்கள் நீதிமன்றத்தில் வைத்து விசாரிக்குமாறும் இவ் விசாரணையை தான் ஏற்க வில்லை எனவும் சியாஸ்கோ கூறினான். மனைவி எலெனாவும் இதே பதிலையே கொடுத்தார். விசாரணைக்கு பணிய மறுத்தமைக்காக மரணதண்டனை வழங்கியதாக தேசிய இரட்சணிய முன்னணி தெரிவித்தது. சியாஸ்கோவின் காட்டாட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு புதிய அரசு முன்னைநாள் வெளியுறவு அமைச்சராக இருந்த மனெஸ்கோ தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இவ் வருட ஏப்ரலில் ஜனநாயக தேர்தலை நடாத்துவதாகவும் புதிய அரசு அறிவித்துள்ளது.

இவ் வகையான சம்பவங்கள் சோசலிச நாடுகள் என அழைக்கப்படும் நாடுகளில்

(தொடர்ச்சி 34 ம் பக்கம்....)

www.tamilarangam.net



# ..o வார்த்தைகளில்லை o..

நான்
கவிதை எழுதுகிறேன்
வார்த்தைகளில்லை
பிரிவு வேதனைகளால்
காதலை வளர்க்கின்ற
இதயங்களுக்கு
அன்பாய்...
கவிதை எழுதுகிறேன்
வார்த்தைகளில்லை

நிறவெறிகளின்
கூக்குரலை
வேற்றுமைப் பிண்டங்களின்
நாற்றங்களை...
ஓ....
நரக வேதனைகளை
கவிதை எழுதுகிறேன்
வார்த்தைகளில்லை

தூர வானத்து
நிலவொளியில்
சுகம் காணும்
பூக்களாய்
விடிவுகளுக்காக ஏங்கும்....
எமது இதயங்களுக்கு...
கவிதை எழுதுகிறேன்
வார்த்தைகளில்லை.

- ஆனந்த சுரேஷ் -

www.tamilarangam.net



# ஆரம்ப காலங்களில்
## தமிழர் கலை இலக்கியம் - ஓர் பார்வை.

மனித சமூகவரலாற்றது காலத்துக்குக் காலம் ஒவ்வொரு சமூக அமைப்புக்கூடாக இன்னொரு சமூக அமைப்பாக மாறிவந்துள்ளது. இந்நிலையில் இலக்கிய வடிவங்களும் அந்தந்த சமூக அமைப்பின் அரசியல் பொருளாதார நிலைமைகளையும் வாழ்க்கைப் போராட்டங்களையும் எண்ணங்களையும் பிரதிபலித்தே வந்துள்ளது.

இலக்கிய வரலாற்றை புராண இதிகாசங்களாகவும் பழந்தமிழ், இலக்கியம் சங்க இலக்கியம், சங்கம் மருவிய இலக்கியம், பக்தி இலக்கியம், அரசியல் இலக்கியம், போன்ற வடிவங்களின் ஊடாக வளர்ந்து வந்துள்ளதையும் காணமுடியும்.

இலக்கிய வடிவங்களில் ஒவ்வோர் காலத்து உட்கருவும் ஒவ்வொன்றாகவே இருந்துவந்துள்ளது. கச்சியப்பர், கம்பர் போன்றவர்களால் இயற்றப்பட்ட கந்தபுராணம் இராமாயணம் போன்ற புராண இதிகாசங்களை புனைகதை இலக்கியம் என்றே சொல்லவேண்டும். இவற்றில் கற்பனையழகுடன் கூடிய பெரிய அலங்கார வர்ணனைகளையும் நடைமுறையும் யதார்த்தமற்ற தன்மைகளையுமே காணமுடிகிறது.

பழந்தமிழ் சங்க இலக்கிய நூல்கள் போரைப்பற்றியும், காதலைப்பற்றியுமே விதந்துரைக்கின்றன. தமிழகத்தின் சங்ககால அரசியல் நில மன்னராட்சிக் காலமாகும். இக்காலகட்டத்தில் மூவேந்தர்களுட்பட எண்ணிக்கையிலடங்காத குறுநில மன்னர்களும் தமிழகத்தை ஆட்சி செய்தனர். இவ்வேளை மூவேந்தர்களுக்குள்

www.tamilarangam.net



ளும், மூவேந்தர்களுக்கும் குறுநில மன்னர்களுக்கிடையிலும் மண்ணுக்கான, பெண்ணுக்கான, மாற்று அரசு, அதன் செல்வத்தினை தமதாக்குவதற்கான போர்களே பெருமளவில் நடைபெற்றுள்ளன. இவ்வேளை ஒவ்வொரு அரசர்களினதும் அரச சபையிலும் வீற்றிருந்த புலவர்கள் தாங்கள் அண்டியிருந்த அரசர்களின் ஆட்சியின் சிறப்புக்கள் பற்றியும் அவர்களின் போர்வீரியமும் வீரதீரங்கள் பற்றியும் பாடியுள்ளார்கள். இவை சங்ககால இலக்கியங்களின் மேம்பாடாகும்.

இந்த இலக்கியத்தை அடுத்த இலக்கியவடிவம் தர்ம இலக்கியங்களையும் உலக நீதியிலக்கியமே உள்ளடக்கிய போதனை இலக்கியமாகவும் பிற்கால சோழ பல்லவர் ஆட்சியில் நாயன்மார் மூலம் பக்தி இலக்கியமாகவும் பரிணமிக்கின்றது. போரைப்பற்றியும் வீரத்தைப்பற்றியும் விதந்துரைத்த அந்த இலக்கியத்தின் அத்திவாரமும் அதன் உட்கருவும் வேறு அறநெறிக்கொள்கை கொண்டதாகவும் பக்தி மயப்பட்டதாகவும் மாற்றம் பெறுகின்றது.

இன்று இந்தியாவிலும் அதனுடன் தமிழகத்திலும் ஏற்பட்ட பெரும்பொருளாதார மாற்றங்களே காரணமாகும். பிற்கால மன்னராட்சியில் வேளாண்மையும் (விவசாயம்) உள்நாட்டு வணிகமுமே மேலோட்டமான பொருளியல் அமைப்பாக இருந்தது. இதையடுத்து வெளிநாட்டுடனான வாணிபம் ஆரம்பமாகின்றது. இதனால் தமிழகத்தில் பெருவணிக வர்க்கம் ஆரம்பமாகின்றது. காலப்போக்கில் இவர்களின் வர்த்தகம் இவர்களை பெரும் செல்வக் குவியல்களுக்கு அதிபதிகள் ஆக்குகின்றது. அங்கே இவர்கள் சமூகத்தில் அரசனுக்கு அடுத்தபடியான சமூக அந்தஸ்தையும் பெறுகின்றனர். தமிழகத்தில் இப்பெருவணிகர்கள் தாம் திரட்டிவைத்திருக்கும் செல்வங்களையும் சொத்துக்களையும் பாதுகாக்க சமூக ரீதியான கருத்துக்களையும் தோற்றுவிக்கின்றனர்.

www.tamilarangam.net



இலக்கியத்தை "மண்ணும் மனித உறவுகளும்" என்ற நூலில் கோ. கேசவன் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றார். கருத்துக்களின்றி மனித சமுதாயம் நடைபோட முடியாது.

"அரச வினைதரு தெருவில் பண்ணியம் பகர்ந்து
கம்பலைக் கழி பெரும் செல்வத்தைக் கொண்டு
சாலி என்று பட்டங்கள் பெற்று வணிகம் -
சாக்கும் காவலர்களோடு மகிழ்ந்திருக்கிதியில்
இருந்தேனென்று" ஒரு தனிக்குடியாக

வாழ்க்கை நடத்திய வணிகர்களும் தங்களுக்கென்று சிற்சில கருத்துக்களைக் கொண்டிருந்தனர். தம் வாழ்க்கை நிலையிலிருந்து அந்த வகைய கருத்துக்களை உருவாக்கிக் கொண்ட தமிழ் வணிகர்கள் தம் செல்வ நிலையை நிலைநிறுத்திக்கொள்ளவும் அதைப் பாதுகாத்துக் கொள்ளவுமான தத்துவங்களைக் கொண்டனர். கைப்பற்றிய செல்வத்தை ஈட்டுவதற்கும் அதைப் பாதுகாப்பதற்கும் நினைத்த வணிகர்கள் அதற்காக "பொருள்வரைதல்" என்னும் கருத்தை புனைந்திருக்கின்றனர். மேலும் கள்ளாமை, கொல்லாமை, போன்ற தத்துவங்களையும் உருவாக்கின்றனர்.

பண்டைய வணிகர்கள் தம் கருத்துக்களை பரப்பி பலப்படுத்த வடநாட்டிலிருந்து வந்த சமணம், பௌத்தம், கை கொடுத்தது. எனவேதான் பெரும்பாலும் அன்றைய வணிகர்கள் சமணர்களாகவோ, புத்தசமயத்தினராகவோ இருந்தனர். சமணர்கள் உலக நிலை சாவகதர்மம் (இல்வாழ்வு) யதிதர்மம் (துறவாழ்வு) என இரண்டாகப் பிரித்தனர். இதில் சாவகதர்மம் கொள்பவர்கள், பொருள்வரைதல், கள்ளாமை, கொல்லாமை, பொய்யாமை, பிறர்பொருள் விழையாமை என்று ஐந்து விரதங்களையும் நோக்க வேண்டும் என்பது

த்தில் ஈடுபட்டுக் கொண்டு வணிகத்தில் பொருள் சேர்த்த பிரிவினரின் சிந்தனையைக் கொடுமின்றிப் பிரதிபலிக்கின்றன. பொருள்வளத்தை செல்வம் மேலும் முக்கியமாகக் கருதப்பட்டது. இந்திய சமயங்களிலே சமணத்தைப் போன்று பொருள் ஈட்டுவதற்கு அங்கீகாரத்தையும் கொடுத்த சமயம் ஏதுமே இல்லையெனலாம். சமூகத்தில் பெண்கள் பிறரிடமிருந்து பாதுகாக்க வறுமையில் உழல்கின்ற பிரிவினருக்கு தானம், கொல்லாமை, பிறர் பொருள் விரும்பாமை போன்ற தத்துவங்கள் போதிக்கப்படுகின்றது".

பழந்தமிழ் இலக்கியம் சங்கம், சங்கமருவிய, பக்தி இலக்கியம் போன்ற வடிவங்களைக் கொண்ட இலக்கிய வரலாறு 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அரசியல் இலக்கியமாக தோற்றம் பெறுகின்றது. இவ்வரசியல் இலக்கியத்தின் ஆரம்பகுதி சமயங்களை மறைந்தும் சுதேசங்களை மீண்டுமான நிலையில் சிந்திருக்கக் கருத்துக்களை உள்ளடக்கியதாக இருந்தது. இதனைய மீறு சமுதாயப் பிரச்சினைகளையும் சமுதாய விடுதலைகள், அடக்குமுறைகளையும் அம்பலமான வெளிப்படுத்தல்களை போராட்டங்களை உள்ளடக்கியதான தன்மையுடன் வளர்ந்துள்ளது.

தமிழ் இலக்கிய வரலாற்றையும் அதன் வடிவங்களையும் மேற்கண்ட வகையில், இலக்கிய வரலாற்றாசிரியர்கள் வகுத்துள்ள போதிலும் பண்டைய இலக்கிய நூல்கள் அதை இயற்றிய பாடிய புலவர்கள் அவர்களின் வரலாறுகள் சம்பந்தமாகவும் அவை தோன்றிய காலங்களைக் கணிப்பதிலும் இருபக்கப் பெரிய வேறுபாடுகள் இருக்கின்றன.

தமிழ் இலக்கிய உலகின் பெரும்பாலான இலக்கிய ஆசிரியர்கள் பண்டிதர்கள், வித்துவான்கள் புலவர்கள், பிரசங்கிகள், போன்றோர்கள் இவ் இலக்கியச் சம்பவங்களை

www.tamilarangam.net



யும் சில பண்டைய நூல்களின் காலத்தையும் வேண்டுமென்றே
பின் இழுத்திருந்து பழம் பெருமை பேசுவதற்குரிய தொழிலாளர்க்கோ
ண்டார் ஐயத்தைப் பற்றியும், தமிழ்மொழியையும் சாலவனையும்
யின்றியே பேசுவார்கள் (சில தொன்றி) மன்தோன்று காலத்து
முன்னோறிய மூத்த குடித் தமிழர்களும் தமிழ்மொழியும் என்கி
-ஷ்டுவார்கள். ஐக்க கட்டுவர்கள் அதனையும் தமிழ்க்கட்டுவர்
கள் ஆக்கின்ற ஐயத்தையும் தமிழையும் தமிழர்களின் இருளை
காரத்தின் ஐக்கடவர்களே அழகு தமிழ் பேசி புலவர்களை
நம் முன்னோர்களும் விளையாடிட்டனர். நக்கீரன் நெற்றிக்
கண் காட்டினும் குற்றம் குற்றமே என்ற சிவனுடன்
விளையாடியதும் முருகன் சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம்
வேண்டுமா? என ஔவையுடன் விளையாடியதும் கடவுள்களின் திரு
விளையாட்டு. கடவுள் விளையாட்டால் தமிழ் இலக்கிய வரலாற்றின்
உண்மை நிலைகள் அறிவியல் ரீதியில் அறுகு ஆராய்வுக்கான
தடையும் போட்டனர்.

இத்தகைய தடைகள் இருந்தபோது
திலும் அவற்றையும் தாண்டி சில அறிஞர்கள் கண்டெடுத்து
கொண்ட பல வரலாற்றாசிரியர்களும் ஆய்வாளர்களும், தமிழ் இலக்
கிய வரலாற்றிலிருந்து பலசமுதாயவரலாறு ஆய்வுகள் செய்துள்ள
னர். இத்துடன் அக்காலப்புலவர்கள் இலக்கியத்தோடே தமிழ்
மொழியின் இலக்கண அமைப்பு வழக்கியலையும் அதனோடான தமிழ்
மொழியின் வளர்ச்சி பற்றியும் குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால் இதுவரை
யில் கல்லவையில் செய்யப்பட்ட ஆய்வுகள் எல்லாவற்றையும் சாதா
ரண மக்களுக்கு சென்றடைந்தது என்பதும் பாடசாலைக்
கல்விக் கென பாடப்புத்தகங்களாக அச்சிடப்பட்டுள்ளது என்பதும்
கேள்விக் குரிய தொன்றே.

- கேண் -

www.tamilarangam.net



## அமெரிக்க படையெடுப்பு:- பனாமா

அமெரிக்க ஆக்கிரமிப்பாளர் டிசம்பர் 19ம் திகதி பனாமா மீது படையெடுப்பை மேற்கொண்டனர் அமெரிக்காவிற்கு இவ்வகையான படையெடுப்பு புதியதல்ல 1983ம் ஆண்டு கிறெனெடா மீதான ஆக்கிரமிப்பும் 1986ல் லிபியா மீதான தாக்குதலும் 1989ம் ஆண்டு பனாமா மீதான படையெடுப்பு தொடர்கிறது. இவ் இராணுவ நடவடிக்கை அனைத்து ஜனநாயக சமாதான விரும்பிகளின் கண்டனத்துக்குள்ளானது. அத்துடன் இச்செயல் சுயாதீனமான நாடுகளின் இறைமையை துச்சமாக மதிப்பது என அமெரிக்காவைக் கண்டித்தனர்.

வல்லரசுகள் தமது ஆதிக்கத்தினை நிலைநாட்டுவதற்காக பல நாடுகளில் இராணுவ கேந்திர நிலையங்களை நிறுவியுள்ளன. இக்கேந்திர நிலையங்களை பாதுகாப்பதற்காக அந்நாடுகளில் தமது பொம்மை அரசை நிறுவி வந்துள்ளன. அப்பொம்மை அரசுகள் எதிர்க்கப்படும் போது தமது இராணுவத்தினையிட்டே இவ் எதிர்ப்பை முறியடிக்கின்றன. இதற்கு சென்ற வருடம் பிலிப்பைன்ஸில் அக்கினோ அரசு எதிர்க்கப்படும் தறுவாயில் அமெரிக்க அரசு தலையிட்டு காப்பாற்றியதனை ஓர் உதாரணமாகக் கொள்ளலாம்.

வல்லரசுகளினால் ஏற்படுத்தப்பட்ட பொம்மை அரசு தமக்கெதிராகத் திரும்பும் போது அல்லது எதிர்க்கப்படும் போது மீண்டும் தமக்கு சார்பான தலைமையை புதிதாக ஆட்சியில் அமர்த்துகிறது.

அமெரிக்கா.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பனாமா கால்வாயை முக்கிய இராணுவ கேந்திர ஸ்தாபன மாக 75 வருடங்களிற்கு முன் நிர்மாணித்து பயன் படுத்தி வருகின்றது. இதனால் அமெரிக்கா தனது இறைமைக்கு குந்தகம் ஏற்படாமலிருப்பதற்காக தனது அடிவருடிகளை பனாமாவில் ஆட்சியில் அமர்த்தி வருகிறது. இதனடிப்படை யிலேயே நொரிகாவின் ஆட்சி நடைபெற்றது. நொரிகா அமெரிக்காவின் நலனுக்கு குந்தகம் இல்லாமல் தனது சொந்த தரகு வியாபாரங்களை [போதைவஸ்து கடத்தல், ஆயுதக் கடத்தல், சர்வதேச உளவு ஸ்தாபனங்களுக்கு உளவுகளை காவுதல்] இலாபகரமாக நடத்தி வந்தான். பாரிய சொத்துக்களையும் கறுப்புப் பணங்களையும் சேகரித்து இன்று ஓர் பெரிய சர்வதேச புள்ளியாகியுள்ளான். 1988ல் நொரிகாவின் பங்காளி ஜோஸ் பிளொண்டல் அமெரிக்காவில் வைத்து கைது செய்யப்பட்டான். அமெரிக்க நீதி மன்றத்தில் இடம்பெற்ற விசாரணையின் போது நொரிகாவின் போதை வஸ்து கடத்தல் அம்பலமாகியது. இதனைத் தொடர்ந்து அமெரிக்கா நொரிகாவை பதவியை விட்டு விலகி வேறு நாட்டிற்கு செல்லுமாறும் கோரியிருந்தது. நொரிகா இதனை ஏற்கவில்லை. அமெரிக்காவின் வற்புறுத்தலின் பேரில் நொரிகா பதவி நீக்கம் செய்யப்பட்டதாக பனாமா அதிபர் டெல்வெல்லே அறிவித்தார்.

நொரிகா பாராளுமன்றத்தினைக் கூட்டி தனக்கு அதிருப்தி பெரும்பான்மை இருப்பதாக உறுதிப்படுத்தி டெல்வெல்லேயை பதவி நீக்கம் செய்தான். இதனைத் தொடர்ந்து பொருளாதார நெருக்கடிகளை கொடுத்து

www.tamilarangam.net



நொரிகாவை பணியவைக்க முனைந்தது அமெரிக்க அரசு. இதனால் பனாமா மக்கள் பெரும் நெருக்கடிகளை முகம் கொடுத்தனர். இதனைத் தொடர்ந்து எதிர்க் கட்சியின நடன் மக்கள் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர். இவ் ஆர்ப்பாட்டங்களை மிருகத்தனமாக நொரிகா இராணுவத்தைக் கொண்டு நசுக்கினான்.

மே. மாதம் நடை பெற்ற தேர்தலில் நொரிகா தரப்பில் போட்டியிட்ட ஆகிய தோற்கடிக்கப்பட்டு எதிர் கட்சி தரப்பில் போட்டியிட்ட எண்டாரா வெற்றி அடைந்தார். இவரது வெற்றிக்கு அமெரிக்க ஒத்துழைப்பும் ஒரு காரணமாகும். இத்தேர்தலில் வெளிநாட்டுச் சக்திகளின் தலையீடு இருப்பதாக கூறி இத் தேர்தலை நொரிகா அரசு அங்கீகரிக்கவில்லை. இதன் பின் நொரிகா தன்னை ஒர் தேசியவாதியாக காட்ட முயற்சித்தான். "பனாமா கால்வாய் பனாமாக்களே உரியது" போன்ற கோஷங்களை பரவலாக ஏற்படுத்தி அமெரிக்க இராணுவ கேந்திரங்கள் மீது சிறிய தாக்குதல்களையும் மேற்கொண்டான்.

புதிய ஜனாதிபதி பதவியேற்ற ஒரு மணி நேரத்தில் அமெரிக்கா தனது துருப்புக்களை இறக்கி பனாமா இராணுவத் தலைமையகம் மீது குண்டு வீசித் தாக்கியது மேலும் [illegible] நொரிகா கும்பலைக் கைது செய்வதாக கூறி அப்பாவிப் பொது மக்களை கொன்று குவித்தது.

அமெரிக்காவின் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க முடியாமல் நொரிகா பனாமாவில் அமை

www.tamilarangam.net



நிற்கும் வத்திக்கான் தூதரகத்திற்கு தஞ்சம் புகுந்தான். நொரிகா வேறு நாடுகளிற்கு சென்று தஞ்சம் அடையக்கூடாது என்பதில் அமெரிக்கா உறுதியாக இருந்தது. முன்னர் நொரிகாவுடன் அமெரிக்கா மெடலின் கோஷ்டி போதைவஸ்து கடத்தல் ஆயுதக்கடத்தல் சி.ஐ ஏ உளவுப் பரிமாற்றங்கள் அம்பலத்திற்கு வந்துவிடும் என்றஞ்சியதே காரணம்.

பத்து நாட்களின் பின் கடந்த 3ம் திகதி அமெரிக்க இராணுவத்திடம் சரணடைந்தான் அமெரிக்கா அதிகாரிகள் பாதுகாப்பில் புளோரிடாவுக்கு விமானம் மூலம் அழைத்துச் செல்லப்பட்டான். அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தன்னை ஓர் உலக நீதிமானாக காட்டிக் கொண்டு.

"போதைப் பொருள் கடத்தல் மன்னரும்
இனி யோசிக்கத்தில் ஊக்குவிக்கத்தில்
இருந்தும் காட்டப்பட்டோர்கள் நீதியின்
பிடியில் இருந்து தப்ப முடியாது என்
பதில் அமெரிக்கா எந்தளவிற்கு
கரிசனையுடனும் உறுதியுடனும் இருந்தி
ருந்து என்பதை உலகிற்கு காட்டும்
தொனியான சங்கதியாக நொரி
காவின் சரணாகதி அமைகிறது."

என பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தது நகைப்புக்குரியதாக உள்ளது. இதே ஜோர்ஜ் புஷ் C.I.A யின் தலைவராக இருந்த போது C.I.A யின் உளவாளியாக இருந்து சிறந்த முறையில் செயல்பட்டவர் என்று நொரிகாவைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# கவன்.



காலடிச் சத்தங்கள் பலமாக கேட்டன... "விக்டர் டேய் விக்டர்" என்று அழைத்தான் ஒருவன். விக்டர் கண்களைத் திறந்து பார்த்தான். படுத்திருந்த படுக்கையைச் சுற்றி எச்சில் சோற்றை பொறுக்கும் காக்கைகள் போல எல்லோரும் அவனைச் சுற்றி துப்பாக்கிகளுடன் நின்றனர். மொத்தமாக பத்து பதினைந்து பேர் இருக்கும்.

விக்டரால் எதுவுமே பேச முடியவில்லை. அவன் படுக்கையில் படுத்தபடியே அவர்களைப் பார்த்தான் அந்த பார்வையில் பயத்துடன் கூடிய ஆச்சரியம் தெரிந்தது.

"டேய் எழும்படா.. .. எழும்படா.." என்று ஒரு குரல் அந்தக் குரலைக் கனவே எங்கேயோ கேட்டது போல உணர்ந்தான் விக்டர்.

படுக்கையில் இருந்து இழுக்கப்பட்டான் விக்டர். அவன் கைகளில் ஒரு துப்பாக்கி திணிக்கப்பட்டது. இல்லை.... ஒரு கருநாகத்தைக் கையில் கொடுத்தனர்.

அவர்கள் அவனை ஒரு கிராமைய கொட்டிலுக்கு கூட்டிச் சென்றனர். அங்கே அவன் கண்களில் முன்பு கைதாகி இருந்த பலர் தென்பட்டனர். அவர்களில் ஒரு சிலரை அவன் நன்கு அறிந்திருந்தான். அவர்களும் தன்னை ஆச்சரியத்துடன் பார்ப்பதைக் கடைக் கண் விழியில் பார்த்தான் விக்டர். அவர்களின் பார்வை விக்டரை நடைப் பிணமாக்கியது.

புல் கூட பூரான் பூச்சியாக மாறும் போது மல்லுக்கு நிற்பது மடைத்தனம் என்று அவன் இதயம் கூறியது.

இன்றைய அந்த இரவும் விக்டர் தூங்கவே இல்லை.

www.tamilarangam.net



அச்சோ அவர்கள் தூக்க
விடவில்லை. "டேய் எம்மோடு
சேர்ந்து கொள்ளாவிடில்
உன்னை குடும்பத்தோடே அழி
த்து விடுவோம். உன்னையும் உயி
ரோடு விட மாட்டோம்." இன்னும்
பல கதைகளை மிரட்டினர்.
அவன் சற்று மௌனமாகச்
சிந்திக்க அடிகளும் உதைகளும்
ஆரம்பமாயின. வாயில் இருந்து
இரத்தம் கசிந்தது. "என்ன எம்
மோடு சேர்ந்து கொள்கிறாயா
...? இல்லையானால்" துப்பாக்
கியை அவன் நெற்றிக்கு
நேரே நீட்டினான் ஒருவன்.
விக்ரமுக்கு 'ஆம்' என்று சொல்
வதைத் தவிர அந்தக் கணத்தில்
வேறு ஒன்றும் தெரியவில்லை.

"என்ன செய்யிறது
மாட்டுப்பட்டாச்சு --- இவர்கள் எப்படி
இந்த மாதிரி மாறினார்கள். உயி
- ரோடை எரிக்கிறதும்... அடிச்சு
கொல்லுறதும் மனிதாபி-
மானத்தை மறந்த செயல்கள்.
இனத்தாலே மனத்தை விதைச்சு
ஏன இந்தக் கொடுமைகள் எப்படி---?
என்ன மாதிரி சிந்திக்கிறவர்-
களும் இருப்பார்கள் தானே.
இவர்களோடை இருந்து வேற
மாதிரி போனால் தான் இது ஏன்
எப்படி என்டு அறியலாம்.
என்ன மாதிரி இவங்களிட்டை
இருந்து சனத்தை காப்பாற்ற-
லாம். என்னை உள்ளுக்கும்
இவங்களுக்கு தெரிஞ்சால்.....
அப்பாடா... என் நிலைமையை
நினைச்சுப் பார்க்கவே பயமாயிருக்கு
-- ஆ... .தெரிஞ்சவரை முயற்சி
பண்ணிப் பார்ப்பம்."

விக்ரமின் சிந்தனையை கலைத்-
து "டேய் என்ன நித்திரையோ
எழும்படா விக்ரம்" என்றா
ன். "சரி போ....." அவன்
ஒரு மெல்லிய சிரிப்புடன்
"நாளும்" என அதோ சொல்ல
எழுந்தான். திருப்பியென
வந்தால் ஏதாவது "நாங்கோ
இன்டைக்கு எங்கே போவோம்.
விக்ரம் நீயே சொல்லு பார்க்கலாம்"
என்றான்.

"பாதுகாப்புக்கா போறம்
பயமாக்கத்தானே" என்றான்விக்ரம்

சொனியின் இடுப்பை விக்ரமின் உதைகளை அழுத்திக் கொண்டது. "எங்கே எங்கே எல்லாம் போகுதோ என்று எனக்கு தெரியாது நான் என்ன செய்வது"

காற்றை கிழித்துக் கொண்டு வேகமாக சென்றது ஜீப் வண்டி. இரண்டு பக்கங்களும் அடர்ந்த காடு. நிறைந்து அரைமணிநேரம் கழிந்திருக்கும். அங்கே இருந்த சிறிய சந்தியொன்றில் வேகமாக திரும்பியது ஜீப்.

ஜீப் திரும்பிய வேகத்தில் குறுக்கே வந்த ஓர் சிறுவனை மோதிக் கொண்டது! வண்டியை நிறுத்தவே இல்லை. சிறுவன் துடிதுடித்து அந்த இடத்திலேயே இறந்துபோனான்.

இப்படி ஓடிய அந்த உருவம் "ரோட்டில போற போது பார்த்து போறதில்லை! இவனெல்லாம் உயிரோடை இருந்து என்னத்தைக் கிழிக்கப் போறான்!"... என்றும்.. "ஆஹா"... என்று கேட்டுக் கொண்டது.

விக்ரமுக்கு இந்தக் கூட்டு கொள்ளை நடந்தது ஜீரணிக்க முடியவில்லை. அதை வார்த்தைகளால் வெளியிடவும் முடியவில்லை. கண்களில் கண்ணீர் நிறைந்தது. அவன் சற்று கஷ்டப்பட்டு சமாளித்துக் கொண்டான்.

ஒதுக்கமாக ஜீப் வண்டி ஒரு வீட்டின் முன்னே நிறுத்தப்பட்டது.

திறந்த வீட்டினுள் கொள்ளையர் நுழைந்தது. அந்த வீட்டிலிருந்த நகைகள் பணம் உட்பட எல்லாவற்றையும், கொள்ளையடித்துக் கொண்டனர்.

அங்கே தேசத்தின் செல்வங்களைப் பொறுக்கி எடுப்பதை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்த அந்தச் சிறுவனை,

துப்பாக்கி வெறியன் ஒருவன் பசி தீர்க்க முற்பட்டதும் விக்ரம். அவனை திரும்பி சீறிய தீயால் தடுத்துக் கொண்டான்.

(தொடர்ச்சி 48ம் பக்கம்....)

www.tamilarangam.net



# இனவாதத்தின் தோற்றம்.

காலனித்துவ, நவகாலனித்துவ, ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் தாம் ஆட்சி செய்யும் நாடுகளில் ஒடுக்குமுறை, சுரண்டல் மூலம் மக்களை அடிமைப்படுத்துகின்றனர். இந்நாடுகளின் இறைமை என்பவற்றை கணக்கில் எடுக்காமலும் சுரண்டலில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கும், வளர்ச்சியடையாத நாடுகள் பொருளாதார ரீதியாக தொடர்ந்தும் தங்களில் தங்கியிருப்பதற்காகவும், அந் நாடுகளின் மக்களுக்கிடையில் இன, மத, மொழி ரீதியாக முரண்பாடுகளை உண்டாக்கி அம்மக்களை தங்களுக்குள் மூட்டி மோதவைத்து அந்த நெருப்பில் குளிர் காய்ந்து வருகின்றனர். மக்கள் தங்களை சுரண்டி அடிமைப்படுத்துபவர்களுக்கெதிராக கிளர்ந்தெழாமல் அவர்களது போராட்ட உணர்வுகள் பல்வேறு வழிகளாலும் மழுங்கடிக்கப்பட்டு திசை திருப்பப்படுகின்றது. இவ்வாறான பல்வேறு நடவடிக்கைகளில் அவர்கள் எமது நாடான இலங்கையில் எதனை கையாண்டார்கள் என்பதை நோக்குமிடத்து அது இனவாதம் என்பது தெளிவாகும். ஆயினும் அதனை எவ்வாறு காலனித்துவவாதிகள் உணர்ந்து திட்டமிட்டு செயற்பட்டார்கள் என்பதையும் அது எவ்வாறு கருத்தியல் வடிவம் பெற்று சிறுபான்மையினர் மீது வன் செயலாக உருவெடுத்தது என்பதையும் கீழே நோக்குவோம்.

காலனித்துவ ஆட்சிக்காலத்தில் பலநிலைமைகளாலும் மற்றைய இனத்தவரிலும் பார்க்க பெரும்பான்மை இன சிங்கள மக்கள்; சமவாய்ப்பு அற்று இருப்பதாக கருதியதற்குரிய காரணிகள்

(1) பெரும் தோட்டங்கள், ஏஜென்சிகள், வங்கிகள் மற்றும் வெளிநாட்டு வியாபாரத்தின் முக்கிய பகுதிகள் பிரித்தானியரின் (காலனித்துவ ஆட்சியாளர்) கையில் இருந்தமை,

www.tamilarangam.net



உள்நாட்டு கைத்தொழில்கள், வங்கிக்கடன் உட்பட பிறவாய்ப்புக்கள் கிட்டாத வகையில் பிரித்தானியரின் கொள்கை இருந்தமை.

(ii) ஏற்றுமதி, இறக்குமதி மொத்தவியாபாரம் இந்தியப் பெருமுதலாளிகளின் வணிபமூலதனத்தின் ஆதிக்கத்தில் இருந்தன. மித ஆடம்பரமாக இவர்கள் வாழ்ந்ததுடன் அரசியல் ரீதியாக பிரித்தானியருடன் ஒன்றி இருந்தனர். இந்த வணிப முதலாளிகள், பெரும் தோட்டங்களிலும், சாராயத்தவறணைகளிலும், மதுவியாபாரத்திலும் ஈடுபட்டனர். இந்திய வியாபாரிகளின் ஏற்றுமதி மொத்த வியாபாரத்தை சில்லறை வியாபாரிகளால் போட்டிபோட முடியவில்லை.

(iii) சிறு வியாபாரத்திலும் சிங்கள வியாபாரிகள்-முஸ்லிம்களும், செட்டியார் சமூகங்களும் வழமையாக செய்து வந்த வணிகத்தில் போட்டிபோட முடியாமல் இருந்தனர். குறிப்பாக முஸ்லிம் சிறு முதலாளிகள் சாதாரண கிராமங்களில் கூட முதன்மை வகிக்கின்றனர். வேலைவாய்ப்பு, குமாஸ்தாக்கள், அரசசேவை, கப்பல்துறை, புகையிரதப் பகுதி, நகர்ப்புறத்தொழில்கள் ஆகியவற்றில் உள்ள வேலைவாய்ப்புக்களுக்கு போட்டி நிலவியதோடு தமிழ், மலையாள தொழிலாளர்களை கூடிய வாய்ப்பையும் பெற்றிருந்தனர். வியாபாரத்திலும், தொழில்வாய்ப்புக்களிலும் ஏற்பட்ட போட்டியின் காரணமாக வட்டிக்கு கடன் தேவைப்பட்டது, ஆனால் அத்தொழில்களும் பிற இனத்தவரின் ஆதிக்கத்தில் இருந்தது. இதே நேரம் பிறநாட்டு வங்கிகள், சிங்களச் சாராய குத்தகையாளர்கட்கும், உள்ளூர் முதலாளிகட்கும் கடன் கொடுக்க மறுத்தது. இதனால் இவர்கள் தென்னிந்தியச் செட்டிமாரிடமே அதிக வட்டிக்கு பணம் வாங்க நேர்ந்தது.

(iv) காலனித்துவ ஆட்சியாளர்கள் கிறிஸ்தவ மதத்தினருக்கு

www.tamilarangam.net



ஆதரவு அளித்ததோடு மிஷனரிக் கல்வி மூலம் மதமாற்றமும் செய்தனர்.

1833 - 1922 வரை சட்டமன்றத்தில் பௌத்த மதத்தவர்கள் நுழைய முடியவில்லை. இதனால் பௌத்த முதலாளிகள் பணம் இருந்தும் அரசியல் ரீதியாக ஒதுக்கப்பட்டனர் என உணர்ந்தனர்.

பொருளாதார ரீதியாகவும், அதே ரீதியாகவும் தாங்கள் அமைவாய்ப்பற்று இருப்பதாக உணர்ந்து பெரும்பான்மை மக்களிடையே எவ்வாறு கருத்தியல் ரீதியாக இது எடுத்துச் செல்லப்பட்டது என்பதைப் பார்ப்போம்.

சிங்கள மக்களை இலங்கையில் முதலில் குடியேறிய நாகரீகம் படைத்த மக்கள் என்ற உரிமையை முன்வைப்பதன் மூலம் தாமே இந்நாட்டின் சொந்தக்காரர் எனவும், பின் குடியேறிய அனைவரும் இந்தியர்கள் என உரிமை தொடுக்கின்றனர். இவ்வாறு இலங்கை சிங்களவர்க்கு சொந்தமான நாடு எனப்பட்டது. இக் கருத்து 1922ம் ஆண்டு அநாகரீக தர்மபாலாவால் முன் வைக்கப்பட்டது. அத்துடன் இலங்கைக்கு புத்தர் வந்து விசேஷ உறவை வைத்தார் என்ற பொய்யான கருத்தியலை முன்வைப்பதன் மூலம் இலங்கை புத்த தர்மத்தைக் கொண்ட தர்ம தீபம் என அழைக்கப்பட்டது. சிறுபான்மை இனத்தவர்கள் சிங்கள, பௌத்தத்தைச் சார்ந்து இராவிடில் அவர்கள் தரம் குறைந்தவர்களாவர். தமிழர்களும், ஐரோப்பியரும் நம்பிக்கையற்ற மதிப்புக்குறைந்த இனம் என தர்மபாலாவால் கூறப்பட்டது.

இப் பொய்யான கருத்தியல் மூலமே பௌத்த சிங்கள இனவாதம் தோன்றியது. நாவலாசிரியர்கள், நாடக ஆசிரியர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் இக்கருத்தை தூண்டினார்கள். பியதாசா சிறிசேனவின் நாவல்களில் கதாநாயகர்கள், கதாநாயகிகள் புத்த மதத்தவர்களாகவும் சிங்கள உணர்வில்

www.tamilarangam.net



பெருமைப் படுபவர்களாகவும் உள்ளனர். மற்றைய இனத்தவர்களும், பிற மதத்தவர்களும் தரம் குறைந்தவர்களாக் காட்டப் பட்டார்கள்.

பிரித்தானிய ஆட்சி தனது நலனை முதன்மைப்படுத்தி இனங்களுக்கு எதிராக பிரித்தாளும் சூழ்ச்சியை புரிந்தது. இவ்வாட்சிக்கு எதிராக எடுக்கவேண்டிய போராட்டத்தை சிங்கள தலைவர்கள்- அவர்கள் கொண்டுவந்த இறைச்சிக் கடைகள், தவறணைகள், கிறிஸ்தவ ஆலயங்களை ஒழிக்கும்படி சீர்திருத்தப் பாணியில் வேண்டியதுடன் சிறுபான்மையருக்கு எதிரான கருத்தியல்கள் மூலம் மக்களை தூண்டினர். அந்நியர் ஆண்டதனால் தமது பரம்பரை வீழ்ச்சியடைந்து என எண்ணம் கொண்டவர்கள் மத்தியிலும், பொருளாதார, அரசியல் ரீதியில் வலு இழந்தவர்களுக்கும் இக்கருத்தியல்கள் எழுச்சியைக்கொடுத்தன. இலங்கை சுதந்திரமடைந்தபின் ஆட்சிக்கு வந்த அரசுகள் தங்கள் ஆட்சியைத் தக்கவைப்பதற்கு ஏற்ப இக்கருத்தியல்களை வலுவூட்டியும், உண்மையான வரலாறுகளை திரிபு படுத்தியும், சிறுபான்மையினருக்கு எதிரான இனவாதத்தை மெருகூட்டி வளர்த்தன.

உ-ம்: துட்டகைமுனு + எல்லாளன் போராட்டம் மண், அரசைக் கைப்பற்றும் போராட்டமாக இருந்ததையும். இரு படைகளிலும் இன வேறுபாடு இல்லாமல் சிங்கள + தமிழ் போர்வீரர்கள் இருந்ததையும் மறைத்து சிங்களவர்களுடன் போட்டியிட்ட தமிழர்கள் வரலாற்று எதிரிகளாக துட்டகைமுனு எல்லாளன் போராட்டத்தை முன்வைத்து இனங்களுக்கிடையில் இனவெறியை வளர்த்தனர். துட்டகை- முனுவால் அநுராதபுரத்தில் கட்டப்பட்ட எல்லாளனின் சமாதிக்கு இன வேறுபாடு இல்லாமல் மரியாதைக்குரிய வணக்கம் செலுத்த வேண்டுமென வேண்டப்பட்டது. ஆனால் ஆட்சிக்கு வந்த அரசுகள் இனவாத கருத்தியல்கள், வரலாற்று திரிபுகளை வலுவூட்டி இன

www.tamilarangam.net



வெறியை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்டு, சமாதிக்கு செலுத்திவந்த மரியாதைக்குரிய வணக்கத்தை தடைசெய்வதற்கு ஏற்ப நகர அபிவிருத்திச் சபை மூலம் சமாதிக்கு அருகில் சென்ற பிரதான வீதியை மூடி புதிய பாதையைத் திறந்தது. அத்துடன் துட்டகைமுனு + எல்லாளனின் போராட்ட வரலாறுகளை பாடப்புத்தகங்களில் இருந்து நீக்கியது.

இனவாத வளர்ச்சிக் காலகட்டங்களிலும் அதன் பின்னரும் தொழிலாளர்களிடையே இருந்த வர்க்க உணர்வையும் இனவாத கருத்தியல் எவ்வாறு வன்செயலாக உருவெடுத்தது என்பதை அடுத்த இதழில் பார்ப்போம்.

— எம். மணி —

---

(-----16 ம் பக்க தொடர்ச்சி)

சோசலிசம் நடைமுறைப்படுத்தப் படாததினையே எடுத்துக் காட்டுகிறது. இந் நாடுகளில் கட்சி அதிகார ஆட்சியும் தனிநபர், தனிநபரை சார்ந்த கும்பலின் ஆட்சிகளே நடைபெற்றுள்ளன என்பது தெளிவாகிறது. கிழக்கு ஐரோப்பிய மக்கள் சீர்திருத்தத்தினையும் ஜனநாயகத்தினையும் கோரி போராடுகின்றனர்.

இந் நாடுகளில் சோசலிசம் என்ற பெயர்ப் பலகையுடன் பாசிச ஆட்சியே நிலவியுள்ளதை சம்பவங்கள் தெளிவாக்குகின்றன. இவ்வகையான அடக்குமுறைக்கு உட்பட்டு இவ் ஒடுக்குமுறைக்கு எதிராக எழுந்து போராடமுடியாத சூழலைவிட நடந்துவரும் மாற்றங்கள் பேரளவு ஜனநாயகமுள்ள புதிய சூழலை உருவாக்குமானால் அது வரவேற்கத்தக்கதே!

— மா. சுரேந்திரன் —

• • • × • • • × • • •

www.tamilarangam.net



# பேசுங்கள்

எம் வாழ்வைக் கருவறுத்த
எத்தர்களுடன்
எதுவென்றறியாமல்
ஏதோ ஏதோ பேசுகின்றோம்
பேசுவதில் பிழையில்லை.

எம்மினத்தின் ஏற்றத்திற்காய்
ஏந்தியதை
மக்களுக் கெதிராய்
ஏந்தி எறிந்ததில்
சுவையும் இழந்து.
சமாதான வாழ்வுக்காய்
மாநாடுகளில்
சங்கமிக்கின்றோம்.

'விடுதலைப் போரில்'
விட்ட பிழை
விரைந்துணர்ந்து
வீராப்பு வீரமதைக் கைவிட்டு
மக்களுக்காய்
மக்களின் அரவணைப்பிலிருந்து
பேசுங்கள்!

– கேள் –

www.tamilarangam.net



மதம்

# புதிய குழப்பங்கள் (2)

சென்ற இதழின் சுருக்கம் :-

மூன்றாம் உலகநாடுகளின் பொருளாதார வறுமை பெரும் போராட்டங்களை உருவாக்கிவிடும் என்றும் இதன் விளைவாக அங்கு அமையப்போகும் தேசிய அரசுகள் தமது தொடர்ச்சியான இருப்புக்கும் சுரண்டலுக்கும் தடையாக இருக்குமென்றும் அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா உள்ளிட்ட மேலாதிக்க வல்லரசு நாடுகள் அச்சம் அடைகின்றன. ஆகையால் மூன்றாம் உலக நாடுகளில் தேசிய அரசுகள் உருவாவதை தடுப்பதற்கு பல விதங்களில் திட்டமிடுகின்றன. இத் திட்டங்களில் ஓர் அங்கம்தான் மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்த மக்களிடம் மதப் பிரசாரங்களை மேற்கொள்வதும், புதிய புதிய மதங்களை அறிமுகம் செய்வதும், மக்களை மதங்களின்மேல் நம்பிக்கை கொள்ளச் செய்வதற்குமான அனைத்து நடவடிக்கைகளும் ஆகும்.

மதங்களை நம்பாதீர்கள்! அது சைவமாக இருக்கலாம்; வைணவமாக இருக்கலாம்; புரட்டஸ்தாந்தியாக இருக்கலாம்; கத்தோலிக்கமாக இருக்கலாம். எந்த மதங்களையும் நம்பாதீர்கள்! ஆனால் தேவன் ஒருவன் இருக்கின்றான். கடவுள் ஒருவன் இருக்கின்றான். அவன்தான் யேசு கிறிஸ்து .......

www.tamilarangam.net



யேசுவை மட்டும் நம்புங்கள்! என்று கோசமிடு கிறார் சாது செல்லப்பா.

கிறிஸ்தவ மதத்திற்குரிய பிரதான அம்சங்களாகிய அதே பைபிள் - யேசுநாதர் - செபம் - பிரார்த்தனை - அதே ஞானஸ்நானம் ஆகிய அனைத்தையும் அங்கீகரித்துக் கொண்டு « கடவுளை நம்புங்கள்! மதங்களை நம்பாதீர்கள்! » என்பது போன்ற சில கோசங்களை உள்ளடக்கிய புதிய வகைப் பிரச்சாரங்களின் மூலம் தமக்குப் பின்னால் ஒரு புதிய கூட்டத்தை உருவாக்க முயற்சித்து வரும் சாது செல்லப்பா, ஜெனி போன்றவர்கள் மட்டும் ஒரு மதத்தை சாராதவர்களாக இருக்க முடியுமா? - இல்லை! இவர்களும் ஒரு புதிய மதத்தைச் சார்ந்தவர்கள்தான். அம் மதத்தின் பெயர்தான் 'புதுஒளி' [NEW LIGHTS].

முற்காலத்தில் 'கொள்ளியால் பேய்' என்று அழைத்தான் மனிதன். சேற்றில் இருந்து தோற்றம் எடுக்கின்ற, இரவில் எரியும் தன்மை கொண்ட « மெதேன் » வாயுதான் அது என்று நிரூபித்தது விஞ்ஞானம். வேப்பமரம் புளிய மரங்களின் கீழ் இரவில் நித்திரை கொள்ளும் மனிதன் மயக்கமடைகிறான் / சில வேளைகளில் மரணம் அடைகின்றான். இதற்கெல்லாம் 'பேயடித்தது' 'முனியடித்தது' என்ற மூடநம்பிக்கைகளில் மூழ்கிக் கிடந்தான் மனிதன். இரவில் ஒளித்தொகுப்பு நிகழா நிலையில் தாவரங்கள் (குறிப்பாக, கூடிய இலைவாயில்

www.tamilarangam.net



களைக் கொண்ட வேப்பமரம் புளியமரம் போன்றவற்றில் அதிகாலையில்) வெளியிடும் காபனீரொக்சைட்டை சுவாசிப்பதே இதற்குக் காரணம் என்பதை விஞ்ஞானம் நிரூபித்தது. சந்திரனில் மனிதன் காலடி வைத்தான். இச் சம்பவம் மதங்களுடன் கொண்டிருந்த பல மூடநம்பிக்கைகளை பொய்மையாக்கியது.

இப்படியாக காலத்துக்குக் காலம் விஞ்ஞானம் வளர்ச்சியடைகின்றது - புதிய புதிய கண்டுபிடிப்புக்கள் தோன்றுகின்றன. நடைமுறை நிகழ்வுக்குரிய விஞ்ஞானக் காரணங்கள் அறியப்படுகின்றன. மனிதன் படிப்படியாக மூடநம்பிக்கைகளிலிருந்து விடுபட்டு பகுத்தறிவின்பால் மனங்கொள்கிறான். இளைய தலைமுறைகள் மதங்களிலும் அலட்சியம் கொள்கின்றனர்.

விஞ்ஞானக் கருத்துக்களை எதிர்கொள்ள முடியாத நிலையில் அவற்றிற்கு சரணடைய நிர்ப்பந்திக்கப் படுகிறான் மதவாதி. சில மூடநம்பிக்கைகளைத் தவிர்த்து அவசியமான சில புதிய கருத்துக்களை உள்ளடக்கி சீர்திருத்தங்களைச் செய்து மதங்களுக்கு புத்துயிர் கொடுக்கிறான்.

பைபிள் பழைய ஏற்பாட்டில் இருந்து புதிய ஏற்பாடு தோன்றியதும் இச் சீர்திருத்தத்தின் விளைவு தான். மாதவிடாய்க் காலத்தில் பெண்களை விலக்கி வைத்தல் போன்ற அன்றைய மூடநம்பிக்கைக்குரிய சில விடயங்கள் பைபிள் புதிய ஏற்பாட்டில்

www.tamilarangam.net



தவிர்க்கப் பட்டுள்ளன. கி.மு 469 - 399 காலப்பகுதியில் வாழ்ந்த தத்துவமேதை சோக்கிரட்டிஸ் இன் மூடநம்பிக்கைகளுக்கு எதிரான தத்துவக் கருத்துக்களின் தாக்கம் பைபிள் - புதிய ஏற்பாட்டின் தேவையை அவசியப்படுத்தியிருக்கலாம்.

இதே கிறிஸ்தவ மதமானது ஐரோப்பிய சமுதாய வளர்ச்சிக்கும், சமூக மாற்றத்திற்கும் ஏற்ப மேலும் சீர்திருத்தத்தை வேண்டியதன் விளைவுதான் கத்தோலிக்கத்தில் இருந்து புரட்டஸ்தாந்தை தோற்றுவித்தது.

இதேவிதமான மதச் சீர்திருத்தங்களை இந்து மதத்திலும் புகுத்த விரும்பினார்கள் சில மதச் சீர்திருத்தவாதிகள். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் விவேகானந்தர், சித்பவானந்தர், குன்றக்குடி அடிகளார், அம்பேத்கார் போன்றோர் ஆவர். ஐரோப்பிய சமூகம் வளர்ச்சியடைந்தது போன்று இந்திய சமூகம் வளர்ச்சியடையவில்லை அதாவது நிலவுடைமைச் சமூகக் கலாச்சாரங்கள் பழக்கவழக்கங்களில் இருந்து இந்தியச் சமூகம் இன்னும் முழுமையாக விடுபடவில்லை. ஆகையினால் மதச் சீர்திருத்தங்களும் இந்திய சமூகத்திற்கு அவசியமற்ற ஒன்றாகியது. அதுமட்டுமல்ல இம் மதச் சீர்திருத்தங்களை முன்வைத்தவர்களும் ஆரம்ப காலங்களில் பெறுமதியற்றவர்களாயினர்.

இதே வகையான ஒரு புதிய வகை மதச்சீர்திருத்தம்தான் « மதங்களை நம்பாதீர்கள் !

www.tamilarangam.net



கடவுளை நம்புங்கள்! » என்னும் கோசம். இக் கோசத்தின் உண்மைக் கருத்தென்ன? "எங்கள் மதத்தை நம்புங்கள்!" என்பதே. மனித மூளையில் இருக்கும் நினைவில் மனதைக் கட்டுப்படுத்த வல்ல "ஹிப்னாட்டிசம், மெஸ்மெரிசம்" (மனவசியக் கலை) போன்ற உளவியல் துறையில் தான் பெற்றுக்கொண்ட பயிற்சியை மதத்தை வளர்ப்பதற்காக, மதத்தின்மேல் நம்பிக்கை கொள்ள செய்வதற்காகப் பிரயோகிக்கிறார்கள் பல மதவாதிகள். இந்த முறையை ஐரோப்பாவில் "ஜெனின்" போன்ற மதவாதிகள் சிலரும் பின்பற்றுகிறார்கள்.

ஆனால் இவ் விஞ்ஞான முறையில், ஹிப்னாட்டிசம் மெஸ்மெரிசம் போன்ற உளவியல் பயிற்சியில் தேர்ச்சி பெற்றிருந்த பகுத்தறிவாளர் டாக்டர் ஏபிரகாம் கோவூர் மனநோயாளிகள் பலரைக் குணப்படுத்தியுள்ளார். ஆனால் அவர் இதற்காக கடவுளின்/மதத்தின் பெயரை பாவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் கிறிஸ்தவ வேதமாகிய பைபிளைப் போன்ற இந்து மத வேதங்களை, உபநிடதங்களை நம்புங்கள் ஆனால் புராணங்களை நம்பாதீர்கள் என்கிறது சாதுசெல்லப்பாவின் அடுத்த பிரச்சாரம்.

இந்துமத வேதங்களைப் பொறுத்தவரை அது தத்துவ இயலுக்குரிய ஆரம்பக் கேள்விகளை எழுப்புகின்றன என்பது உண்மையே. உலகம் முதலில் எப்படி இருந்தது

www.tamilarangam.net



அது "ஸத்" ஆக - அதாவது உலகம் முதலில் இருந்து அப்படியேதான் இருந்திருக்கிறது.------

அது "அஸத்" ஆக - அதாவது உலகம் முதலில் இருந்ததில்லை.------- [இந்து தத்துவ இயல் - பக். 12, ராகுல சாங்கிருத்தியாயன்]

இவைகள் வேத ரிஷிகளினால் எடுப்பப் பட்ட தத்துவ இயலுக்குரிய அடிப்படை அம்சங்கள்தான். ஆனால் அன்றைய மனிதனின் அறிவு வளர்ச்சிக்கு உட்பட்ட அளவிலேயே உள்ளன என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும். சாது செல்லப்பா கூறுவதுபோன்று இக்கால மனிதன் இவற்றை அப்படியே முழுமையாக நம்பிவிடமுடியுமா?

உபநிடதங்களை நம்புங்கள் என்கிறார். உபநிடதத்தின் முக்கிய அம்சங்கள் என்ன? பிரம்மம், ஆன்மா, மறுபிறப்பு, முக்தி... இப்படியாக இன்றைய யதார்த்த உலகில் இருந்து விடுவித்து மனிதனை மறுபிறப்பு, முக்தி எனும் மாயைக்குள் தள்ளிவிடும் கருத்துக்களையே இவ் உபநிடதம் கூறுகிறது.

யூத மதத்தில் இருந்த பவுல் (Paul) என்பவன் ஜெனிக்கிற்றுடன் சேர்ந்த தேவனின் அசரீரியினால் கிறிஸ்தவாக மாறினான் என்ற பைபிளில் உள்ளதுபோல் புராணங்களிலும் (கந்தபுராணம் திருவிளையாடற் புராணம், பெரிய புராணம்) பல கட்டுக் கதைகள் உள்ளன என்பது உண்மையே. அப்படியிருக்க இந்துமத புராணங்களை மட்டும் நம்பாதீர்கள் என கூறுவது விசித்திரமே.

www.tamilarangam.net



பைபிள் உட்பட வேதங்கள், உபநிடதங்கள் இதிகாசங்கள், புராணங்கள் அனைத்தும் அன்றைய மனித அறிவின்பால் எழுந்த, அன்றைய சமுதாய நலன்களைப் பேணும் வகையிலான தொன்மை இலக்கியங்களே. இத் தொன்மை இலக்கியங்கள் இன்றைய மனிதனின் யதார்த்த வாழ்வுடன் ஒன்றி நிற்க முடியாத பல அம்சங்களைக் கொண்டிருந்த போதும் அன்றைய மனிதனின் அறிவு வளர்ச்சி-யை அளவிடுகின்றன; சமுதாய நிலைமைகளைப் பிரதிபலிக்கின்றன என்ற உண்மைகளை சமூக விஞ்ஞானிகள் ஏற்கின்றனர்.

* * * * *

கருத்துக்களானது பூகோள, பௌதிக, புற சூழ்நிலைகளின் தாக்கமின்றி தோன்றுகின்றன என்றும் அக் கருத்துக்கள்தான் உலகத்தை ஆளுகின்றன என்றும் மத வாதிகள் கூறுகின்றனர். இது விஞ்ஞான ஆய்வை மறுக்கும் கருத்துமுதல்வாதம் ஆகும். - வி. லோகதாஸ்.

---

(---- 26ம் பக்க தொடர்ச்சி.)

புகழ்ந்தார். அதே போல் றேகனின் நிர்வாகமே "போதை வஸ்து தடுப்புப் பிரச்சாரத்தை திறமையாக மேற்கொண்டவர் நொறிகா" என்று நற்சான்று வழங்கியது.

நொறிகா மீது முழு விசாரணையை மேற்கொண்டால் ஜோர்ஜ் புஷ் பல வித நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க நேரலாம்.

•—•—•—•—•

-மா. நரேந்திரன்-

www.tamilarangam.net



# ஜே.வி.பி



ஆட்டம் முடிந்துவிட்டது.

இது இலங்கையின் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயவர்த்தனா JVP தலைவர்களை அழித்த பின்பு பத்திரிகையாளருக்கு அளித்த பேட்டியின்போது கூறியது. ஒரு பொறுப்பான அமைச்சரின் முட்டாள்தனத்தையே இது காட்டுகிறது. ஒரு பிரச்சனை எழும்போது அந்த பிரச்சனை எழுவதற்கான அடிப்படைக் காரணங்களை ஆராய்ந்து அதனைத் தீர்க்கும்போதே அந்த பிரச்சனைகள் முடிவுக்கு வரமுடியும்.

JVP போன்ற தீவிரவாத அமைப்பு ஏன் தோற்றம் பெற்றது - அது எவ்வாறு இளைஞர்களையும் மக்களையும் கவர்ந்து வளர்ந்து வந்தது என்பதனை அறிந்து அதனை தீர்க்க முயல்வதே சரியான நடவடிக்கையாக அமைய முடியும். இலங்கையின் சுரண்டல் அமைப்பு முறை, அந்நிய சார்பு, மோசமான வாழ்க்கைத் தரம், வேலையின்மை போன்ற காரணிகள் தொடர்ந்தும் இருப்பதால் JVP போன்ற அமைப்புக்களை முற்றாக அழித்துவிட முடியாது.

## J.V.P யின் தோற்றம்:-

ரசியாவில் கல்வி கற்றுக் கொண்டிருந்த வேளையில் (1964) விடுமுறையில் இலங்கை வந்த

www.tamilarangam.net



ரோகண விஜயவீராவிற்கு மீண்டும் ரசியா செல்ல விசா
மறுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1965 இல்
இலங்கை கம்யூ. கட்சியிலிருந்து - பின் அதன் இளை
ஞர் முன்னணித் தலைவராக செயற்பட்டார். பின்னர்
1967 இல் கம்யூ. கட்சியிலிருந்து பிரிந்து மக்கள் விடு
தலை முன்னணி (JVP) எனும் அமைப்பை நிறுவினார்.
1971 இல் சிறிமா அரசுக்கு எதிராக ஆயுதமேந்திய கிள
ர்ச்சியை JVP மேற்கொண்டது. இதன்போது அவ்
அரசு இந்திய உதவியுடன் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட
இளைஞர், யுவதிகளை அழித்து இக் கிளர்ச்சியை அட
க்கியது.

1977 இல் பதவிக்கு வந்த ஐ.தே.க அரசு இவரை
விடுதலை செய்தது - அரசியல் கட்சியாக JVP யை
நிறுவ அனுமதியும் வழங்கியது. 1982 இல் ஜனாதிபதி
தேர்தலில் போட்டியிட்டு மூன்றாம் இடத்தைப்
பெற்றார் - தொடர்ந்து JVP பாராளுமன்ற பாதையில்
செயற்படலாயிற்று. எனினும் 1983 யூலை கலவரத்தை
அடுத்து JR அரசு JVP தான் கலவரத்திற்குக் கார
ணம் என பழிசுமத்தி தடைசெய்தது. இதனை அடு
த்து JVP மீண்டும் தலைமறைவு பாதைக்கு நிர்ப்ப
ந்திக்கப்பட்டது. இப்படி JR தடைசெய்யாது இருப்பின்
JVP ஆனது பாராளுமன்றப் பாதையில் தொடர்ச்சியா
கச் செயல்பட்டிருக்கவும் கூடும். அப்படி JVP
ஆகியிருந்தாலும்கூட இதுபோன்ற அமைப்புக்கள் உரு
வாகும் என்பதை கண்டுகொள்ள வேண்டும்.

www.tamilarangam.net



## JVP யின் செயற்பாடுகள் :-

மாணவர் மத்தியில் செல்வாக்கு பெறுவதில் JVP முனைப்பாக நின்றது. பாடசாலைகள் பல்கலைக் கழகங்களில் தனது சார்பு அமைப்புக்களை நிறுவியது. இதன் தொடர்ச்சி மாணவர் விடுதிகள் ஆயுதங்களை பாதுகாக்கும் இடமாகவும், குண்டுகள் தயாரிக்கும் இடமாகவும் மாறியது. அரசியற் கொலைகள் கூட பல்கலைக் கழக வளாகத்துள் நடந்தது தொடர்ந்து அவை மூடப்பட்டன. இவ்வாறாக தென் இலங்கை பல்கலைக் கழகங்கள் பல வருடங்களாக செயற்படாமல் முடக்கப்பட்டது. உண்மையான மக்களின் விடுதலைக்காக போராடும் ஒரு அமைப்பு மாணவ சமுதாயத்தின் நலனை காலில் போட்டு மிதிப்பதில் ஈடுபட்டிருக்கக் கூடாது.

## தனிநபர் அழித்தொழிப்பு :-

அரசுக்கு எதிரான போராட்டத்தில் எதிரியை சரியாகக் கணிப்பிடாமல் அரச கூட்டுத்தாபன அலுவலக ஊழியர்களை அழித்தொழித்தது, மற்றும் அரச படைகளின் குடும்பத்தை / குழந்தைகளை அழித்தொழித்தது போன்ற மக்கள் விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டது. அதுமட்டுமின்றி மனித நேயமற்ற முறையில் உயிரோடு கழுத்தைத் துண்டித்தல், கழுத்தில் ரயர் போட்டு கொளுத்துதல் .... என கொடூரமாகக் கொலைசெய்தனர். தனிநபர் அழித்தொழிப்பு 24 மணித். இல் 65 கொலைகள் என்றளவுக்குக் கூட உயர்ந்து சென்றது.

www.tamilarangam.net



## தொழிற்சங்க நடவடிக்கை :-

JVP யின் தொழிற்சங்க நடவடிக்கையானது எந்தவித தூர நோக்கும் அற்றவிதத்தில் அரசை கவிழ்த்தல் என்னும் நோக்குடன் அரசை ஸ்தம்பிக்கச் செய்தல், விரைவில் செல்வாக்குப் பெறல் என்ற அடிப்படையில் அமைந்தது. தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கூடாக அவர்களை ஸ்தாபனப்படுத்தி தமது தலைமையை உழைக்கும் மக்களின் நலன்களுக்காகவும் போராடும்படி செய்வதற்குப் பதிலாக தனது அரசியல் நலன்களுக்காக தொழிலாளர்களை போராடும்படி நிர்ப்பந்தித்தது. பல வேலை நிறுத்தங்கள் பகிஷ்கரிப்புக்கள் செய்யப்பட்டன. ஆனால் இவை எதுவுமே தொழிலாளர்களின் தன்னியல்பான விருப்பத்துடன் செய்யப்படவில்லை. மாறாக கொலைப் பயமுறுத்தல், மிரட்டல், கடத்தல் என்பவற்றினூடாகவே சாதிக்கப்பட்டது. தொழிலாளர்கள் தமது தேவைகள், நலன்கள் அவர்களாலேயே உணரப்பட்டு போராடி பெறவேண்டியதாகும். ஆனால் நடந்ததோ JVP தீர்மானித்தவற்றையே கேட்டு போராடவேண்டும் என்ற நிலை தோன்றியது. JR தனது சர்வாதிகார நடவடிக்கை மூலம் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கிய 40,000 பேரை வேலையிலிருந்து நீக்கி எவ்வாறு தொழிற்சங்க இயக்கத்தை முடமாக்கினாரோ அதேபோல் வேறு விதமாக - பயமுறுத்தி தொழிலாளர்களை இயக்கங்களில் ஈடுபடவைத்ததின் மூலம் JVP யும் தொழிற்சங்கங்களை முடமாக்கியது. உரிமைகள் பறிக்கப்பட்ட எப்பகுதி மக்களும் தாமே போராடி அவற்றினைப் பெற வேண்டும். மாறாக மற்றவர் பெற்றுக்கொடுப்பின் அதை பறித்தலும் இலகுவாக நடக்கும்.

www.tamilarangam.net



## இந்திய எதிர்ப்பு நடவடிக்கை :-

JVP யின் இந்திய எதிர்ப்பு நடவடிக்கைக்கு சிங்கள மக்கள் மத்தியில் ஆதரவு இருந்தது. தமிழர்கட்கு ஆதரவாக இந்திய இராணுவம் வந்துள்ளது என்ற அவர்களது சந்தேகம் புலி-இந்திய யுத்தம் மூண்டதைத் தொடர்ந்து குறைய ஆரம்பித்தது. மேலும் தென் இலங்கையில் இந்திய இராணுவம் நிலை கொள்ளாததால் தமிழ் மக்களைப் பாதித்த அளவுக்கு சிங்கள மக்கள் பாதிக்கப்படவில்லை. ஆனால் சிங்கள பேரினவாதத்தால் சிங்கள மக்கள் மத்தியில் வளர்க்கப்பட்ட இந்திய எதிர்ப்பு வாதத்தை பயன்படுத்தி JVP இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு கோசத்தை உயர்த்திப் பிழைத்தது. பிரேமதாசாவும் இந்திய இரா- ணுவம் திரும்பிப்போக வேண்டும் என காலக்கெடு விதித்ததை அடுத்து JVP யின் அரசியல் முன்முயற்சியை அரசு பறித்துக்கொண்டது. இலங்கை இந்திய உடன்படிக்கை கைச்சாத்திட்டு 1 வருட நிறைவு தினத்தில் அரசு ஊரடங்குச் சட்டத்தை அமுலில் இட்டது. கண்டியில் மக்களை பயமுறுத்தி வீதிக்கு இறக்கி ஊர்வலத்தின் பின்னால் வாகனங்களில் சென்றனர் JVP யினர். அரச படையினர் இடைமறித்ததும் மக்களை அநாதரவாக விட்டுவிட்டு தாம் தப்பி ஓடினர். இவ்வாறாக தென் இலங்கையில் JVP யின் பல இந்திய எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**தலைவர்கள் அழிப்பு;** JVP தலைவர் ரோகண விஜயவீராவும் செயலாளர் உபதிஸ்ஸ கமநாயக்காவும்

உட்பட அரசியல் செயற்குழு உறுப்பினர்கள் 7 பேரில் 6 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களின் அழிவு நேரடி இலங்கையில் ஒரு நிம்மதிப் பெருமூச்சை மக்களிடம் விட்டுச்செல்கிறது என பத்திரிகைகள் கூறுகின்றன. இதுவே ரோகண மக்கள் மத்தியில் எந்தளவுக்கு விரும்பப்படாதவராக இருந்தார் என்பதற்கு ஆதாரமாகும். மாறாக இவருக்கு ஆதரவு இருந்தது என்பது உண்மையானால் இவர் மக்கள் மத்தியிலேயே பாதுகாப்பைத் தேடிக்கொண்டிருக்கலாம். சொந்த அணியிலும் நம்பிக்கையினம் இருந்ததால் இவர் அணிகளை விட்டும் மக்களை விட்டும் சென்று பாதுகாப்பை தேட வேண்டிய நிலை ஏற்பட்டது. இந் நிலையில் இவர் தன்னை பாதுகாக்க 'முதலாளி' வேடத்தை பொருத்தமானதாக தேர்ந்தெடுத்திருக்கிறார் போல் தெரிகிறது. எப்படியோ ரோகணவும் மற்றையோரும் பிடிபட்ட நிகழ்வுகளைப் பார்க்கும்போது துல்லியமான காட்டிக் கொடுப்பால் நிகழ்ந்ததாகவே கருத இடமுண்டு. ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது JVP யின் வரலாறு பல படிப்பினைகளைத் தந்துகொண்டிருக்கிறது.

- ப. வரதன் -

---

(....29ம் பக்க தொடர்ச்சி)

"அப்பாடா——" என்றால் இவனே யாவது தப்பினானே" எழுந்து என்ற மனது திருப்தியுடன் சிகரெட், மற்ற-வர்களிடம் வந்து ஜீப்வண்டியி-னுள் ஏறிக் கொண்டபோதும் வந்த வழியே திரும்பிச்சென்று கொண்டிருந்தான். இருந்தவன் தீர்ந்து போனதினால் பேச்சிகொற்று இல்லை என்னைக் கேளாடு, பேசாமல் கொண்டிருந்தான்.

* * *

- கலை யோகம் -

# — நினைவில் நிறுத்துவோம் ! —

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி கட்சியின் செயலாளர் கே.ஏ. சுப்ரமணியம் அவர்கள் 27.11.89 அன்று காலமானார். அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களின் சுதந்திரத்தை வேண்டி நின்ற அவரது இதயம் இளமைப்பருவத்திலேயே இவரை இடதுசாரி அமைப்புக்களுடன் இணைத்துக் கொண்டது.

ஆரம்பத்தில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்திருந்த கே.ஏ.,1960 களின் ஆரம்பப்பகுதியில் சர்வதேச கம்யூனிச இயக்கங்களில் எழுந்த தத்துவார்த்தப் போராட்டத்தில் ஏற்பட்ட முரண்பாட்டினால் அக்கட்சியில் இருந்து வெளியேறினார். ந. சண்முகதாசனுடன் இணைந்து ஆரம்பிக்கப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியில் வடபிரதேச கமிட்டியின் செயலாளர் ஆனார்.

"நிலவுடைமைச் சமூகத்தின் எச்ச சொச்சமாகிய தீண்டாமைக்கு எதிராக ஒடுக்கப்பட்ட மக்கள் எழுந்து நின்று போராட வேண்டும்" என்ற குரலெழுப்பினார். அப்போராட்டமானது வெறும் சாதியப் போராட்டமாக அமையாமல் முற்போக்கு சக்திகளை ஒன்றிணைத்த வெகுஜன அமைப்பின் ஊடாகவே நடத்தப்பட வேண்டும் என்ற நிதானமான கொள்கையை வகுத்து வழிநடத்திய பிரதானமானவர்களில் கே.ஏ. முதன்மையானவர்.

இச்சந்தர்ப்பத்தில் சென்ற 24.2.89. அன்று காலமாகிய எஸ்.ரி.என். நாகரத்தினம் அவர்களின் மறைவை குறித்த முதலாவது ஆண்டை நினைவு கூர வேண்டியதும் கடமையாகிறது. தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று மானி

www.tamilarangam.net




ட்டபுரம் கந்தசாமி கோவில், பன்னித்தலைச்சி அம்மன் கோவில், செல்வச்சந்நிதி முருகன் கோவில், ஆகியவற்றின் ஆலயப்பிரவேசப் போராட்டங்களின் போதும் சங்கானை, மட்டுவில், நெல்லியடி, கொடிகாமம், போன்ற இடங்களில் இடம் பெற்ற தேனீர்கடைப் பிரவேசத்தின் போதும் மகத்தான பங்களிப்பைச் செய்து பல துன்ப துயரங்களுடன். அடி உதை பட்ட போதும் உறுதிமிக்க போராளியாக வாழ்ந்து காட்டியவர் எஸ். ரி. என். நாகரத்தினம் அவர்கள்.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜனப் போராட்டத்திற்கான ஆரம்ப நடவடிக்கையாக 1966 ஒக்ரோபர் 21ம் திகதி ஓர் எழுச்சி ஊர்வலத்திற்கு ஏற்பாடாகியிருந்தது. நிலவுடமைப் பாதுகாவலரின் வற்புறுத்தலின் பேரில் பொலிசார் ஊர்வலத்துக்கான அனுமதியை மறுத்தனர். ஆனால் எழுச்சி ஊர்வலமானது பிற்போக்கு சக்திகளின் எதிர்ப்பையும் பொலிசாரின் தடையையும் மீறி தோழர் கே.ஏ. [illegible] ஆகியோரதும் தலைமையில் சுன்னாகத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது. இவ் ஊர்வலத்தின் போதும், ஏனைய சட்டவிரோத நடவடிக்கைகளின் போதும், பொலிசாரினால் பல தடவை கைதுசெய்யப்பட்ட கே.ஏ. விடாப்பிடியான [illegible] தாக்குதல்களுக்குட்பட்டார். அவர் வாங்கிய அடிகளும் உதைகளும்தான் அவரின் மரணத்தைத் துரிதப்படுத்தியுள்ளது.

இலங்கையில் உள்ள ஏனைய கம்யூனிஸ்ட் கட்சிகளில் இருந்து வேறுபட்ட கொள்கையைக் கடைப்பிடித்தபோதும், அவர்களது கட்சியும் தமிழ்மக்களின் மீதான இன ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தை

முன்னெடுப்பதற்கு, அவரது முற்கணிப்பு செயல்பாடுகள் தகர்த்து விட்டது.

அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களால் என்றும் மறக்கப்பட முடியாதவர் கே.ஏ. சுப்பிரமணியம் இவரின் தியாக உணர்விற்கு மதிப்பளித்து அதேவேளை இவர்களது போராட்டப் பாதையில் ஏற்பட்ட தவறுகளை விமர்சனத்துக்குள்ளாக்கி படிப்பினைகளைப் பெற்றுக் கொள்வோம்.




கட்டுரைகளுக்கும், அரசியலுக்கும் கொடுக்கின்ற முக்கியத்துவத்தை சிறுகதைகளுக்கும் கொடுங்கள், அப்போது தான்; மனிதம் மக்களிடம் கூடுதலான வரவேற்பு பெற வாய்ப்புண்டு.

- சுதேசகுமார் -
ஜேர்மனி.

'புராதன வாழ்விலிருந்து' என்ற கட்டுரையின் 21ம் பக்கத்தில் 2ம் பந்தியில் "அனுவின் குடும்பத்தினர்" என கட்டுரையாளர் குறிப்பிடுகின்றார். தாய்வழிச் சமுதாயக் காலகட்டத்தில் குடும்பம் தோன்றி விட்டதா? இல்லை என்றே நான் கருதுகின்றேன். அதை குழுக்களாக வரையறுப்பதே சரி என எண்ணுகின்றேன். ஏனெனில் இன்றைய குடும்பத்தை, அன்றைய சமூகத்திலிருந்து வேறுபடுத்திப் பார்க்க வேண்டிய தேவையுள்ளது அல்லவா? இது தவறுதலாக நேர்ந்திருப்பின் இது

www.tamilarangam.net



போன்ற தவறுகள் கட்டுரையாளரால் தவிர்க்கப்பட வேண்டும். மேலும் தாய் வழிச் சமூகத்தில் தந்தையை இனம் காட்டுகிறார் கட்டுரையாளர். கட்டுரையாளர் தாய் வழிச் சமூகத்தை குடும்-பம் என்று கருதவில்லையாயின் இந்த தவறு எவ்வாறு நிகழ்ந்தது

- தாய்வழிச் சமுதாய காலகட்டத்தில் குடும்பம் தோன்றவில்லை என்பதும் குழுக்களாக கூடி வாழ்ந்த தாய் வழிச் சமூகத்தில் தந்தையை இனம் காண முடியாது என்பதும் உண்மையே. இது போன்ற தவறுகளை வருங்காலத்தில் களைய முயற்சிக்கிறோம். ஆயினும் வாசகர் இத்தகைய. தவறை வாசகர் சுட்டிக் காட்டிய பின்பே எம்மால் உணரக் கூடியதாக இருந்தது.

பாஸ்கரன், அசெ.

உங்கள் பத்திரிகையின் மக்களுடைய அன்றாடப் பிரச்சனைகளை சொல்லாமல் இருப்பதாலும், அதற்கான தீர்வுகளை தெளிவாக சொல்லாமல் விடுவதாலும் உங்கள் பத்திரிகை மக்கள் ஆதரவை பெறுவதை விட, ஒரு புத்தி ஜீவிகள் மட்டும் வாசிக்கும் பத்திரிகையாகவே இருக்கும்.

- நயாகரன், பிரான்ஸ்

ஐரோப்பாவில் இருந்து வெளிவரும் சஞ்சிகைகளுள் தரமான கட்டுரை வரும் சஞ்சிகைகள் சிலவே. மனிதத்தில் வரும் கட்டுரைகள் நன்றாக உள்ளன. மதம் பற்றிய கட்டுரையை பொதுமைப்படுத்தப்பட்ட முறையில் செய்வது நல்லது.

- சிவசேகரம் லண்டன் -

உங்கள் முயற்சி தொடர்ந்து வெற்றி பெற எனது வாழ்த்துக்கள்

சி. அருள், சூரிச்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆக்கங்களில் இறுக்கம் தென்படுகிறது. சுவிஸிலிருந்து தரமான சஞ்சிகையாக 'மனிதம்' வெளிவருவது கண்டு மகிழ்ச்சியாக உள்ளது. மக்கள் எல்லோரையும் சென்றடைவதில் கூடிய கவனம் செலுத்தவும்.

- கங்காதரன், மே.ஜேர்மனி.

மனிதம் என்பது ஒரு சமுதாயத்தின் வெளிப்பாடு. சமுதாயம் என்பதே மனிதத்தின் உட்பாடு. மக்கள் சிந்திக்க 'மனிதம்' வளர்ச்சியடைய வேண்டும். மனிதர் வாழ மனிதம் வளர்ந்து வாழ வேண்டும்.

- சிறி. இர்ரிகன் -

எல்லாம் ஒரேவித எழுத்து நடையில் இல்லாமல் விதவிதமாக அமையுமாயின் வாசிக்க மேலும் மேலும் தூண்டுதலாய் இருக்கும். சொல்லப்படுகின்றன விடயத்தில் எடுக்கின்ற கவனம் சொல்லப் படுகின்ற விதத்திலும் எடுக்கப்பட்டால் பத்திரிகை இன்னும் தரமாக அமையும்.

— ராஜேஸ்
மேற்கு ஜேர்மன்.

மனிதம் சஞ்சிகையில் பொதுவாக எல்லாமே நன்றாக உள்ளன. இங்கு இடம் பெற்ற விஞ்ஞானக் கட்டுரை பூமியில் உயிர்களின் உருவாக்கத்தை விளக்கியது. இதை ஓர் சாதாரண வாசகன் புரிந்து கொள்ளும் வகையில் எழுதுவது விரும்பத்தக்கது.

—இ.சிவசோதிலிங்கம்
சூரிச்.

• × × × × × •

| |
|---|
| புராதன வாழ்விலிருந்து --- கட்டுரை தொடர் அடுத்த இதழில் வெளிவரும்_ தவிர்க்கமுடியாத காரணத்தால் இம்முறை இடம்பெறவில்லை. |

ஆ-ர் குழு.

www.tamilarangam.net



# படலை திறப்பு

மாநகரை பிரித்த மா மதிலை
மானுடரின்
கைகள் தூர்த்துத்
துண்டுகளைப் பெயர்த்தெடுக்க
கொட்டும் மழையிற்
ப்ராண்டன்பூர்க் நெடும்படலை
மீண்டும் திறக்கும்.

தான் தொடுத்த யுத்தத்தால்
இரண்டாய்ப் பிளவுண்ட
தேசம் இனி இணையும்
பிரிவுண்ட குடும்பங்கள்
ஒன்றுபடும் எனும் நினைவு
தலை நீட்டும்.

குறைந்த விலையிற் சுடல் உடைப்பு
இன்னும் சுரண்ட இடவசதி
பண்டங்கள்
கொட்டிக் குவிக்கப் புதுச் சந்தை
என்றும் நினைவும்
..................
கண் முன் ஒரு வாசல்
திறப்பதனைக் காண்பவர்கள்
கண்ணுக்குத் தெரியாமல்
திறக்கும் வாசல் பல.

www.tamilarangam.net

இன வெறியும், நிற வெறியும்
பாசிசமும்
இறந் தொழிந்த பின்னும் நாசிவெறி பெருமிதமும்
தலை நிமிரும்
இரண்டாம் உலகப்போர் ஒழிந்தும்
ஒழியாது பெய்ந்திருந்த
அச்சங்கள் ஓங்கும்!

— சிவா. வண்டன் —

மனிதம் இரு மாதத்துக்கு ஒருமுறை :-

சந்தாவிபரம் :

ஒரு பிரதி — 2 SFr

ஒரு வருடத்துக்கு — 15 SFr (தபாற்செலவு உட்பட)

ஐரோப்பிய நாடுகளுக்கு :

ஒரு வருடத்துக்கு — 18 SFr (தபாற்செலவு உட்பட)

• ஐரோப்பிய நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளில் உள்ளவர்கள் தொடர்பு கொண்டு சந்தா விபரங்களை அறிந்து கொள்ளவும்.

பணம் அனுப்புவதற்குரிய வழி —
SPAR KONTO:157146601
"BüCHER VERKAUF"
SCHWEIZERISCHE KREDIT ANSTALT
SWITZERLAND

வாசகர்களே!
விமர்சனங்களையும்
ஆக்கங்களையும்
வரவேற்கிறோம்!

ஆ-ர் குழு.

தொடர்புகட்கு —

**Manitham**
Zentrum 5 (Z 5)
Unterstützungsverein
Postfach 8542
3001 Bern
SWITZERLAND

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# - அவலம் -

மூன்று நாள்
மழையைத்
தாங்காத குடிசையும்
முற்றத்தை
விட்டுப் போகாத
வெள்ளமும் ....

தாயின் அணைப்பில்
அடங்காத
பிஞ்சின் முனகலும்
தூக்கம் இல்லாத
இரவும்
கொடூரமான பசியும் ....

விழுந்த வீதியில்
இருந்த நாடும்
பிணங்களும்
அதனை
கடந்து செல்லும்
ஊமை மனிதர்களும் ....
அவலமாக
எங்கோ
ஒழி ஒழி மறைகின்றனர்.

+ கலாநேச